பக்கங்கள்: பன்னிரண்டு

Registered as a Newspaper

# உதயன்

விலை ரூபா 6.00

சுடர்:16 வள்ளுவர் ஆண்டு 2032 பங்குனி 11 சனிக்கிழமை (24-03-2001) UTHAYAN - A Lively National Tamil Daily கதிர்:118

யாழ்ப்பாணம்
யாழ்ப்பாணம்

# வன்னியில் சிவிலியன் இலக்குகள் மீதான விமானக் குண்டு வீச்சை நிறுத்துங்கள்!

## தலைகீழாகத் தொங்கவிட்டு சிறுநீரைப்பருக்கி சித்திரவதை!

### உயர்நீதிமன்றில் தமிழர் முறைப்பாடு

கொழும்பு,மார்ச்24

கடந்த வருடம் விசேட அதிரடிப் படையினரால் க்ரைதீவில் வைத்துக் கைதுசெய்யப்பட்டு தடுத்து வைக்கப்பட்டிருந்த சமயம் தாம் தலைகீழாகக் கட்டித் தொங்கவிடப்பட்டு, வயரினால் கசையடிக்கு உட்படுத்தப்பட்டதாகவும் -

தமது வாய் பலவந்தமாகத் திறக்கப்பட்டு, அதற்குள் சிப்பாய் ஒருவர் சிறுநீர் கழிக்க, அதனை அருந்தும்படி தாம் பலவந்தப்படுத்தப்பட்டதாகவும் -

உயர்நீதிமன்றத்தில் முறையிட்டிருக்கிறார் தமிழர் ஒருவர்.

அருளம்பலம் வைத்திபாராஜா என்பவரே உயர்நீதிமன்றத்தில் தாம தாக்கல் செய்துள்ள அடிப்படை உரிமை மீறல் மனுவில் இவ்வாறு தெரிவித்துள்ளார்.

அவரின் சார்பிலும், கருப்பையா மலர் என்ற மற்றொரு தமிழ்ப் பெண்ணின் சார்பிலும் தாக்கல் செய்யப்

(12ஆம் பக்கம் பார்க்க)

## ஜனாதிபதிக்கு யாழ்.ஆயர் நேற்று அவசர செய்தி

யாழ்ப்பாணம்,மார்ச்24

**முல்லைத்தீவு மாவட்டத்தில் சிவிலியன் இலக்குகள் மீது விமானக் குண்டுவீச்சுத் தாக்குதல்கள் நடத்துவதை உடனடியாக நிறுத்தும்படி அவசர வேண்டுகோள் விடுத்திருக்கின்றார் யாழ்.ஆயர் அதிவண.தோமஸ் சௌந்தரநாயகம்.**

**இது தொடர்பாக ஜனாதிபதி சந்திரிகா குமாரதுங்கவுக்கு நேற்று அவர் அவசர 'பக்ஸ்' செய்தி ஒன்றை அனுப்பி வைத்தார்.**

அந்தச் செய்தியில் யாழ்.ஆயர் தெரிவித்திருப்பதாவது:-

நோர்வேத் தூதரின் உதவியுடன் மேற்கொள்ளப்படும் சமாதானப் பேச்சுகள் மூலம் போரை முடிவுக்குக் கொண்டுவரும் தீர்வைக் காண்பதில் நீங்கள் உறுதியாக இருப்பது குறித்து பல்வேறு ஐரோப்பிய நாடுகளின் தலைநகரங்களுக்கு நீங்கள் அண்மையில் வி.ஜயம் செய்த சமயம் உறுதியளித்திருப்பது குறித்து நாங்கள் மகிழ்ச்சியடைந்துள்ளோம். இது தொடர்பான நடவடிக்கைகள் விரைவில் ஆரம்பமாகும் என்றும் நீங்கள் உறுதி கூறியுள்ளீர்கள் -

அதேசமயம் -

அரசின் பங்களிப்பான அரச பயங்கரவாதமே விடுதலைப் புலிகளை இப்பாதையைத் தேர்ந்தெடுக்க வைத்தது

(12ஆம் பக்கம் பார்க்க)

## குடும்பஸ்தர் சூட்டுக்குப் பலி!

கொழும்பு,மார்ச்24

மட்டக்களப்பு வாழைச்சேனை வீதியில் - கோரக்கல்லுமடுவில் நேற்றுமுன்தினம் இரவு இடம்பெற்ற துப்பாக்கிச் சூட்டுச் சம்பவத்தில் நான்கு பிள்ளைகளின் தந்தை ஒருவர் பலியானார்.

பலியானவர் 41 வயதுடைய பி. நல்லராஜா என அடையாளம் காணப்பட்டுள்ளார்.

(12ஆம் பக்கம் பார்க்க)

## ஊரடங்கு தளர்வு

யாழ்ப்பாணம்,மார்ச்24

சித்தன்கேணி இளைஞர் நலன்புரி நிலையத்தின் 45 ஆவது வருடப் பூர்த்தியை முன்னிட்டு ஏற்பாடு செய்யப்பட்டுள்ள கலை, கலாசார, இசை நிகழ்ச்சிகளைப் பொதுமக்கள் கண்டுகளிக்க வசதியாக இன்று இரவு 8 மணிமுதல் நாளை அதிகாலை 5 மணிவரை வடலியடைப்பு, சுழிபுரம், *சங்கானை, மாவடி* ஆகிய பகுதிகளில் ஊரடங்கு தளர்த்தப்பட்டிருக்கும்.

யாழ்.பாதுகாப்புத் தலைமையகம விடுத்துள்ள செய்திக்குறிப்பில் மேற்கண்டவாறு தெரிவிக்கப்பட்டுள்ளது.

## குடிசன மதிப்பீட்டுப் பணிக்காக ஜூன் 14 இல் அரசு யுத்தநிறுத்தம்!

### புலிகள் தரப்பிடமும் சண்டையை நிறுத்தக் கோரிக்கை

கொழும்பு,மார்ச்24

நாடு முழுவதும் சனத்தொகை மதிப்பீட்டுப் பணிகள் நடைபெற இருப்பதை ஒட்டி எதிர்வரும் ஜூன் 14 ஆம் திகதி அரசு யுத்தநிறுத்தம் செய்ய உள்ளது.

அன்றைய தினம் யுத்தநிறுத்தத்தைக் கடைப்பிடிக்குமாறு அரசு விடுதலைப் புலிகளிடமும் கோரியிருப்பதாகத் தெரிவிக்கப்படுகிறது.

கொழும்பில் உள்ள ஐநா. அமைப்பின் அதிகாரிகள் மூலம் இந்தக் கோரிக்கையை அரசு விடுத்துள்ளது.

இதேவேளை -

புலிகளின் கட்டுப்பாட்டுப் பகுதிகளில் சனத்தொகைக் கணக்கெடுப்பை மேற்கொள்ள அனுமதிக்கும்படி புலிகளிடம் கோருமாறும் அரசு ஐ.நா. அமைப்பிடம் கேட்டிருப்பதாகத் தெரியவந்தது. (ஐ-3)

## நிவாரண உலர் உணவின் பெறுமதி இரு மடங்காக அதிகரிக்கப்படும்!

யாழ்ப்பாணம்,மார்ச்24

இடம்பெயர்ந்தவர்களுக்கு வழங்கப்படும் உலர் உணவு நிவாரணத்தின் பெறுமதியை இரட்டிப்பாக்க நடவடிக்கை எடுக்கப்பட்டிருப்பதாக யாழ்.அரச அதிபர் க. சண்முகநாதன் தெரிவித்தார்.

யாழ்.செயலகத்தில் நேற்று இடம்பெற்ற உணவு நிவாரண விநியோகம் தொடர்பான கூட்டத்திலேயே அவர் இத்தகவலை வெளியிட்டார். அரச அதிபர் அங்கு மேலும் கூறியதாவது:-

தற்பொழுது ஆயிரத்து 260 ரூபா பெறுமதிக்கு (5 பேர் கொண்ட குடும்பத்துக்கு) வழங்கப்படும் நிவாரணத்தின் பெறுமதியை 3 ஆயிரத்து ஐநூறு ரூபாவாக அதிகரிப்பதற்கான ஏற்பாடுகள் செய்யப்பட்டு வருகின்றன.

இது தொடர்பான பிரேரணையை வடக்கு அபிவிருத்தி புனர்வாழ்வு, புனரமைப்பு அமைச்சர் விரைவில் அமைச்சரவைக்குச் சமர்ப்பிக்கவுள்ளார். அமைச்சரவையின் அங்கீகாரம் கிடைத்ததும் இது நடைமுறைப்படுத்தப்படும்.

நிவாரணத்தின் பணப்பெறுமதியை அதிகரிக்கும் அதேவேளை வழங்கப்படும் பொருள்களின் வகைகளும் அதிகரிக்கப்படவுள்ளன.

ஏற்கனவே அரிசி, சீனி, பருப்பு, பால்மா போன்றவை நிவாரணத்துக்கு வழங்கப்பட்டு வருகின்றன. இவற்றுடன் கோதுமை மா உட்பட வேறுசில உணவுப் பொருள்களும் வழங்கப்படும் - என்று அரச அதிபர் தெரிவித்தார்.

ப.நோ.கூ.சங்கங்கள் நிவாரண விநியோகத்துடன் மட்டும் நின்றுவிடாது சுயதொழில் முயற்சிகளிலும் கவனம் செலுத்த வேண்டும்.

நிவாரணத்துக்கு வழங்கப்படும் அரிசி பருத்தித்துறைக்கு வந்து சேர்ந்ததும் அங்கு வைத்து அதனைச் சோதனை செய்வதற்கு ஒழுங்குகள் செய்யப்படும்.

கூட்டுறவு அபிவிருத்தி உதவி ஆணையாளர், சுகாதார வைத்திய அதிகாரி, பிரதேச சபைத் தலைவர்கள், பாவனையாளர் சங்கப்பிரதிநிதிகள் ஆகியோர்:-

(12ஆம் பக்கம் பார்க்க)

## கிரான் சூட்டுச் சம்பவத்தில் சிப்பாய், இளைஞன் பலி!

கொழும்பு,மார்ச்24

மட்டக்களப்பு வாழைச்சேனை வீதியில் - கிரான் பகுதியில் - நேற்று முற்பகல் இடம்பெற்ற சம்பவமொன்றில் படைச் சிப்பாய் ஒருவரும் இளைஞர் ஒருவரும் உயிரிழந்தனர்.

பலியான இளைஞர் விடுதலைப் புலிகள் உறுப்பினர் என்று இராணுவ வட்டாரங்கள் தெரிவித்தன.

வாழைச்சேனை புலனாய்வுப் பிரிவைச் சேர்ந்த இருவர் கிரான் பகுதியில் சந்தேகத்துக்கிடமான முறையில் நடமாடிய இரு இளைஞர்களைக் கைதுசெய்ய முயன்றவேளை அவர்களில் ஒருவர் தப்பிவிட அடுத்தவர் கைதுசெய்யப்பட்டதாகக் கூறப்படுகிறது. கைதான அந்த இளைஞரிடம் சயனைட் வில்லையும் இரண்டு கிரனேட்டுக்களும் இருக்கக் காணப்பட்டதாக இராணுவ வட்டாரங்கள் தெரிவித்தன.

(12ஆம் பக்கம் பார்க்க)

## ஐ.நா. செயலாளர் பதவிக்கு சந்திரிகா பெயரும் சிபார்சு!

கொழும்பு,மார்ச்24

ஐக்கிய நாடுகள் செயலாளர் நாயகம் பதவிக்காகப் போட்டியிடுவதற்குத் தெரிவு செய்யப்படக்கூடியவர்களின் பெயர்ப்பட்டியலில் ஜனாதிபதி சந்திரிகா குமாரதுங்கவின் பெயரும் இடம்பெற்றுள்ளது.

இந்தப் பதவிக்கு ஆசியாக் கண்டத்தில் பங்களாதேஷ், தாய்லாந்து, இந்தோனேசியா, பிலிப்பைன்ஸ் ஆகிய நாடுகளிலிருந்தும் தனிநபர்கள் தெரிவுசெய்யப்பட்டுள்ளனர்.

இந்தப் பதவிக்குப் போட்டியிட இலங்கையிலிருந்து அரசியல் தலைவர் ஒருவர் தெரிவு செய்யப்பட்டிருப்பது இதுவே முதற் தடவையாகும் என்று "றொய்ட்டர்" செய்தி நிறுவனம் தெரிவித்துள்ளது.

இந்த வருடம் டிசெம்பருடன் முடிவுறும் ஐக்கிய நாடுகள் செயலாளர் நாயகத்தின் பதவிக்கு கோபி அனான் இரண்டாவது தடவையாக மீண்டும் போட்டியிடவுள்ளதாக அறிவிக்கப்பட்டுள்ளது. (ஐ-6)

## பொத்துவில் - அக்கரைப்பற்று வீதியில் 11 விவசாயிகள் கடத்தப்பட்டனர்!

கொழும்பு,மார்ச்24

மட்டக்களப்பு மாவட்டத்தில் பொத்துவில் - அக்கரைப்பற்று வீதியில் நேற்றுக் காலை 7.30 மணியளவில் உழவு இயந்திரம் ஒன்றில் வயலுக்குச் சென்றுகொண்டிருந்த 11 முஸ்லிம் விவசாயிகளை விடுதலைப் புலிகள் கடத்திச் சென்றுள்ளதாக விசேட ஊடகத் தகவல் நிலையம் அறிவித்துள்ளது.

அருகில் உள்ள காட்டுக்குள் அந்த விவசாயிகளைப் புலிகள் கொண்டு சென்றுவிட்டதாகவும் அவர்களில் ஒருவர் மட்டும் தப்பி வந்துள்ளதாகவும் -

ஏனையோர் குறித்து தகவல் எதுவும் தெரியவில்லை என்றும் - தகவல் நிலையம் மேலும் தெரிவித்தது.

பொத்துவில் பொலீஸார் விசேட அதிரடிப்படையினரின் உதவியுடன் அப்பகுதியில் தேடுதல் நடவடிக்கைகளை ஆரம்பித்துள்ளனர். (ஐ-3)

## சமாதான முயற்சிகளில் அரசு அக்கறை காட்டுவதாக இல்லை!

### நெதர்லாந்து தூதரக அதிகாரியிடம் ஆயர் தெரிவிப்பு

யாழ்ப்பாணம்,மார்ச்24

சமாதானம் பற்றிப் பேசிவரும் அரசு அதற்கான முயற்சிகளில் அக்கறைகாட்டி வருவதாகத் தெரியவில்லை. மாறாக விடுதலைப் புலிகளைத் தனிமைப்படுத்துவதிலும் உலக நாடுகளில் அந்த அமைப்பைத் தடைசெய்யும் முயற்சிகளிலுமே அரசு முனைப்பாகச் செயற்பட்டு வருவதைக் காண முடிகிறது.

யாழ்ப்பாணத்துக்கு விஜயம் மேற்கொண்டுள்ள நெதர்லாந்து தூதரக இரண்டாவது செயலாளர் செல்லி றிங்கி றோகலிடம் யாழ்.ஆயர் அதிவண. தோமஸ் சௌந்தரநாயகம் மேற்கண்டவாறு தெரிவித்துள்ளார்.

ஆயர் இல்லத்தில் நேற்றுப் பிற்பகலில் இடம்பெற்ற இந்தச் சந்திப்பின்போது தூதரக அதிகாரியுடன் ஆயர் பல விடயங்கள் குறித்துக் கலந்துரையாடினார்.

(12ஆம் பக்கம் பார்க்க)

இளைய தலைமுறையின் இதயம் கவரும் இன்றைய நாளிதழ்

வடமராட்சியில்....

KOTTAIYOOR STUDY C

## ஸ்ரடி சேக்கிள்

ஆலங்கட்டை வீதி, கொற்றாவத்தை.

**2001 O/L DAY CLASS**

**ஆரம்பம்:** 26.03.2001 திங்கள் காலை 8.00

☆ கடந்தகால பரீட்சை பெறுபேறுகள் எமது நிறுவனத்தின் கல்வித் தரத்துக்குச் சான்றாகும்.

☆ கடந்த காலத்தைப் போன்று கணித வகுப்பு 30 மாணவர்கள் கொண்ட பிரிவுகளாக நடத்தப்படும். (85780)

---

# பாராட்டி வாழ்த்துகிறோம்



*பொன்விழாவை எதிர்நோக்கிக் கொண்டிருக்கும்*
*யா/கரவெட்டி மாணிக்கவாசக வித்தியாலய அதிபர்*

## திரு.வே.துரைசிங்கம்

விஞ்ஞான ஆசிரியராய், ஆலோசகராய்,
அதிபராய் பதவி உயர்வு பெற்று இன்று தரம் 2-I அதிபராக உயர்வு பெற்றமையையிட்டு மனமார வாழ்த்துகின்றோம்.

**தன்னலம் நோக்காது பிறர் சேவையே**
**கடமையாகக் கொண்ட அவர் பணி**
**வளரட்டும், பதவி உயரட்டும்**
**என இறையருளை வேண்டி உளமார வாழ்த்துகிறோம்.**

பாடசாலை ஆசிரிய, மாணவர்கள், பாடசாலை அபிவிருத்திச் சங்கம், பழைய மாணவர், நலன்விரும்பிகள்.

(C/15865)

---

# மரண அறிவித்தல்

**திருமதி இரத்தினசாமி இலட்சுமிப்பிள்ளை (குஞ்சு)**

தையிட்டியைச் சேர்ந்தவரும், மாதகலில் வசித்தவருமாகிய திருமதி இரத்தினசாமி இலட்சுமிப்பிள்ளை 19.03.2001 அன்று காலமாகிவிட்டார்.

இவர் ஆறுமுகம் இரத்தினசாமியின் அன்பு மனைவியும் ஆதித்தனின் அருமைத் தாயாரும் காலஞ்சென்ற நாகலிங்கம் - ஞானம்மா தம்பதிகளின் கனிஷ்ட புதல்வியும் ஆறுமுகம் - யோகமணி தம்பதிகளின் அன்பு மருமகளுமாவார்.

அன்னாரின் இறுதிக்கிரியைகள் நாளை (25.03.2001) ஞாயிற்றுக்கிழமை முற்பகல் 10 மணிக்கு மாதகல் இந்து மயானத்தில் நடைபெறும்.

இந்த அறிவித்தலை உற்றார், உறவினர், நண்பர்கள் அனைவரும் ஏற்றுக்கொள்ளவும்.

தகவல்:
ஆறுமுகம் இரத்தினசாமி
(கணவர்),
நாகலிங்கம் கந்தசாமி
(சகோதரன்).

தற்காலிக முகவரி:-
*அந்தோனியார் வீதி,*
*மாதகல்.*
(85808)

---

# UNIVAC நிறுவனத்தின் மாபெரும் புலமைப்பரிசில்

**1000 மாணவர்களுக்கு எமது நிறுவனத்தினால் வழங்கப்படும் புலமைப்பரிசிலுக்கான போட்டிப் பரீட்சைக்கு இதுவரை பதிவுகளை மேற்கொள்ளாத மாணவர்கள் 25-03-2001 ஆம் திகதிக்கு முன்னர் பதிவுகளை மேற்கொள்ளவும்.**

1201, K.K.S. Road,
Jaffna. (85727)

Director
UNIVAC

---

## புலமைப் பரிசில் 2001

பரீட்சை 27இல் அதிகூடிய புள்ளிகள் பெற்ற பரிசுக்குரியவர்கள்

| | |
|---|---|
| ந.திருத்தணிகன் | 173 |
| அ.சாயினி | 167 |
| ம.அழகரசன் | 164 |
| சி.சாரங்கி | 162 |
| ஆ.ஜதிகானந்த் | 161 |
| ந.வேணுசரன் | 161 |

அடுத்த பரீட்சை:
நாளை (ஞாயிறு) 8.30 (ப.நே.)

*தரம் 1 முதல் O/L வரை*
*முதலாம் தவணைப் பரீட்சை*
*ஆரம்பம் : நாளை (ஞாயிறு)*

**நாவலர்**
ஆனைப்பந்தி, யாழ்ப்பாணம்.
(85778)

---

**லக்ஷ்மி** இணுவில்

விஜயகாந்த் (3வேடங்களில்)
மந்த்ரா, செந்தில்
நடித்த

**சிம்மாசனம்**

(ரீல்ஸ்) காட்சிகள்: 11.00, 2.30 (பு.நே.)
(C/15851)

---

**நாகம்ஸ்**
சுன்னாகம்

அஜித்,
கார்த்திக், மீனா
நடித்த

**ஆனந்தப் பூங்காற்றே**

(ரீல்ஸ்) தினசரி 11.00, 2.30 (பு.நே.)
(85732)

---

**ராஜா** யாழ்ப்பாணம்

11 அக்கடமி அவாட் பெற்ற
சிறந்த படம்

**டைட்டானிக்**

தமிழில்
காட்சிகள்: 10.30, 2.30 (பு.நே.)

28.03.2001 முதல்
வானத்தைப் போல
(C/15741)

---

# மிருதங்க அரங்கேற்ற விழா

சங்கீத ரத்தினம் **திரு.மா.சிதம்பரநாதன்**
*(மிருதங்க விரிவுரையாளர், யாழ்.பல்கலைக்கழகம்)*
அவர்களின் மாணவன்

## செல்வன் ஸ்ரீ.உமாசுதன் அவர்களின்
## மிருதங்க அரங்கேற்றம்

*காலம் :* நாளை (25.03.2001) ஞாயிறு பி.ப.2.30 மணி (பு.நே.)

*இடம் :* துர்க்காதேவி மணிமண்டபம், நல்லூர்.

### நிகழ்ச்சிகள்

| | |
|---|---|
| மங்கள விளக்கேற்றல் | : திரு.வே.பொன்னம்பலம் அவர்கள் (பாக்கியரத்தினம் இரும்பகம், சங்கானை) |
| தேவாரம் | : செல்வி தினேஷா தர்மலிங்கம் (கலைப்பீட மாணவி, யாழ்.பல்கலைக்கழகம்) |
| வரவேற்புரை | : திருமதி கி.சிவராஜா (உப அதிபர், யா/பொன்னாலை வரதராஜப்பெருமாள் வித்தியாசாலை) |
| ஆசியுரை | : சிவத்தமிழ்ச்செல்வி தங்கம்மா அப்பாக்குட்டி (தலைவர், துர்க்காதேவி தேவஸ்தானம்) |
| தலைவர் உரை | : செஞ்சொற்செல்வர் திரு.ஆறு.திருமுருகன் |
| பிரதமவிருந்தினர் உரை | : பேராசிரியர் பொன்.பாலசுந்தரம்பிள்ளை (துணை வேந்தர், யாழ்.பல்கலைக்கழகம்) |
| குரு வணக்கம் | : கௌரவம் |

கலைஞர்களைக் கௌரவித்தல்.

**இசை அரங்கு :**

| | |
|---|---|
| பாட்டு | : இசைக் கலைமணி திருமதி சாரதா பரஞ்சோதி |
| வயலின் | : இசைக் கலைமணி திரு.கா.குகபரன் |
| மிருதங்கம் | : செல்வன் ஸ்ரீ.உமாசுதன் |
| கஞ்சிரா | : இசைக்கலைமணி திரு.சி.துரைராசா |
| மோர்சிங் | : செல்வன் த.றொபேர்ட் |
| மதிப்பீட்டுரை | : மகாவித்துவான் பிரம்மஸ்ரீ ந.வீரமணி ஐயர் |

வாழ்த்துரைகள் :

1. சாகித்திய இசையரசு திரு.நா.வீ.மு.நவரத்தினம் (தலைவர், இசைத்துறை, யாழ்.பல்கலைக்கழகம்)
2. கலாபூஷணம் திரு.சு.கணபதிப்பிள்ளை (இளைப்பாறிய பிரதிக் கல்விப் பணிப்பாளர்)
3. திருமதி றெஜினா இருதயநாதன் (பிரதிக் கல்விப் பணிப்பாளர், கல்வி வலயம் வலிகாமம்)

நன்றியுரை : திரு.பு.ஸ்ரீகாந்தன் (முதல்வர், பிரமணாச்சி தோட்டக் கற்பகப்பிள்ளையார் தேவஸ்தானம்)

மங்களம் அனைவரும் வருக

விழா சிறப்புற வாழ்த்துவோர்:- (C/15860)

**தரன் ரேடஸ்** *130, ஸ்ரான்லி வீதி, யாழ்ப்பாணம்.*

---

# 6 ஆம் மாத நெஞ்சுருகும் நினைவலைகள்

எமக்காக
06
-
10
-
1961



இறைவனடியில்
24
-
09
-
2000

## அமரர் வீரசிங்கம் உதயகுமார் B.Sc.

*(ஆசிரியர் - யா/புனித அந்தோனியார் கல்லூரி)*

கண்ணான செல்வங்களுடன் காலமெல்லாம் வாழாமல்
காயமே பொய்யெனக் கண்ணாளனே – எம்மைக்
கதியற்றவராகக் கண்ணீரில் கலங்க விட்டு
கணப்பொழுதில் காற்றோடு கலந்து சென்றதேனோ?

நீங்காது உமதுருவம் நித்தமும் வந்து
தாங்காது நெஞ்சு தணல்போலக் கொதிக்குதப்பா! – நாம்
பத்திரமாய் வாழ பலகதைகள் பகிடி போல கூறுவது
பாதியிலே பரிதவிக்க விட்டுப் பறந்து செல்வதற்கா?

வாஞ்சைக்குரியவனின் வண்ணமுகம் தேடித்தேடி
வாசல்தனை ஏக்கமுற எதிர்பார்த்து நிற்கும்
எம்மினிய மகவுகளை ஏனென்றும் கேளாமல்
எங்கப்பா சென்றீர்கள் எதை நான் கூறிடுவேன்?

அப்பா உங்களைப் போல் ஆறுதல் யாரெமக்கு?
ஆறுமாத மென்ன ஆறு ஜென்மமானாலும்
ஆறாது எம்துயரம் அணையாத தீபமாய் –எம்
அகத்திலே உமதுருவம் உயிரோடு வாழுமப்பா!

பிரிவினால் துயருறும்:
அன்பு மனைவி,
ஆருயிர்ச் செல்வங்கள்:
ஹேரபிஷா, சாகித்தியன்,
உறவினர்கள்.

*374,பருத்தித்துறை வீதி,*
*(கல்வியங்காடு)*
*நல்லூர்.*
(85763)

---

# திருமண அழைப்பு

அன்புடையீர்!

நிகழும் மங்களகரமான விக்கிரம வருடம் பங்குனி மாதம் 12ஆம் நாள் நாளை (25.03.2001) ஞாயிற்றுக்கிழமை பகல் 1.26 மணி முதல் 3.26 மணிவரையுள்ள சித்தயோகமும் உத்தரட்டாதி நட்சத்திரமும் கடகலக்கினமும் கூடிய சுபமுகூர்த்த சுபவேளையில்

அளவெட்டி
**திரு.அ.செல்லத்துரை**
அவர்களின் புத்திரன்
திருநிறை செல்வன்
**செல்வறஞ்சன்**
அவர்களுக்கும்

வத்திராயன் தெற்கு தாளையடி
**திரு.ஐ.ஆண்டிஐயா**
அவர்களின் புத்திரி
திருநிறை செல்வி
**பத்மினி**
அவர்களுக்கும்

திருவருள் துணை கொண்டு மணமகள் இல்லத்தில் திருமாங்கல்யதாரணம் செய்ய பெரியோர்கள் நிச்சயித்திருப்பதால் அத்தருணம் தாங்கள் தங்கள் குடும்ப சகிதம் வருகை தந்து மணமக்களை ஆசீர்வதிக்கும் வண்ணம் அன்புடன் அழைக்கின்றோம்.

**திருமதி செல்லத்துரை** தங்கள் நல்வரவை நாடும்

**திரு.திருமதி மா.சண்முகதாசன்** (மைத்துனர்)
*"ஸ்ரீ லட்சுமி மஹால்"*
*96, பத்திரகாளி கோயிலடி,*
*வண்ணார்பண்ணை மேற்கு,*
*யாழ்ப்பாணம்.*

**திரு.திருமதி ஐ.ஆண்டிஐயா**
*விளையாட்டரங்கு வீதி,*
*கோப்பாய் தெற்கு,*
*கோப்பாய்.*

**(இருவீட்டார் அழைப்பு)**

(C/15861)

உதயன்

## அரசு இனி என்ன செய்யும்

தமிழீழ விடுதலைப் புலிகள்ன் ஒருதலைப்பட்சமான போர் நிறுத்தம், நேற்றுடன் மூன்று மாதங்களைக் கடந்து இன்று நான்காவது மாதத்திற்குள் காலடி வைக்கிறது.

நோர்வே அரசின் சமாதான முயற்சிக்கு மேலும் கால அவகாசம் வழங்கும் பொருட்டும், சமாதானத்திற்கான உகந்த புறநிலையை உருவாக்கும் நோக்கத்துடனுமே போர்நிறுத்தத்தை இன்றிலிருந்து மேலும் ஒரு மாதத்துக்கு நீடித்திருப்பதாக விடுதலைப் புலிகள் தரப்பில் தெரிவிக்கப்பட்டிருக்கிறது.

இது சமாதானத்தின் மீது விடுதலைப் புலிகள் வைத்துள்ள நம்பிக்கையை ஐயந்திரிபின்றி நிரூபிக்கிறது: இந்த மூன்றாவது போர் நிறுத்த நீடிப்பு இப்போது நடைபெறும் சமாதான முயற்சிகளில் அவர்களுக்கு உள்ள உண்மையான அக்கறையையும் எடுத்துக் காட்டுகிறது; அதனைக் குழப்பி விடக் கூடாது என்பதில் உள்ள ஆர்வத்தையும் எடுத்தியம்புகிறது.

கடந்த மூன்று மாத காலமாக விடுதலைப் புலிகள், ஒருதலைப்பட்சமாகப் போர் நிறுத்தத்தை நடைமுறைப்படுத்தி வந்த போதிலும், அரசு அதனைப் பொருட்படுத்திப் பதிலுக்குத் தானும் போர் நிறுத்தம் செய்யவில்லை. அதற்கு மாறாக இராணுவத் தாக்குதல்களை — போரை — நடத்திவருகிறது.

விடுதலைப் புலிகளின் மூன்று மாதப் போர் நிறுத்தம் முடியும் தறுவாயில், அரச படைகள் நடந்து கொண்ட விதம் வெறுக்கத் தக்கதாகும். புலிகள் தமது போர் நிறுத்தத்தை நீடிக்காமல் ஆத்திரமூட்டும் வகையில் அரசபடைகள் நடந்து கொண்டன. அவ்வாறு ஆத்திரமூட்டினால் புலிகள் போர் நிறுத்தத்தை நீடிக்கமாட்டார்கள்; அதன் பின்னர் சமாதானப் பேச்சுவார்த்தைக்கான சூழ்நிலையை — அதற்கான முயற்சிகளை — கெடுத்து விட்டார்கள் என்று பழிபோடுவது அரசாங்கத்தின் நினைப்பாக— நோக்கமாக-இருந்திருக்கலாம்.

சமாதானத்தின் மீது தீராப் பற்று உள்ளவர்கள் போலவும் அரசியல் தீர்வு காண்பதில் மிகுந்த உறுதி பூண்டவர்கள் போலவும்— அதற்காகச் சபதம் எடுத்தவர்கள் போலவும்— அரச பிரதானிகள் வெளி உலகத்துக்குக் காட்டிக் கொள்கிறார்கள். ஆனால் செயலளவில் சமாதானத்தின் மூலப் பொருள்களில் ஒன்றான அமைதியைக் குழப்புகிறார்கள்.

அரசாங்கம் இனியாவது சொல் ஒன்று செயல் வேறு என்ற போக்கை மாற்றிக் கொள்வது அவசியம். போரினால் ஏற்பட்ட— ஏற்படும்— அழிவுகள் குறித்து மேடைகளில், அறிக்கைகளில் நீலிக் கண்ணீர் வடித்துப் பயனில்லை. செயல் வடிவம் பெறாத வெறும் ''சித்தாந்தங்கள்'' பயனற்றவை!

சமாதானத்தை உண்டாக்குவதில் உண்மையான அக்கறை இருந்தால், அரசு இந்த முறையேனும் போர் நிறுத்தம் செய்ய வேண்டும். இல்லையேல் அதன் சமாதான முயற்சிகளின் நம்பகத் தன்மை அற்றுப் போய்விடும். விடுதலைப் புலிகளை நம்ப இயலாது என்று கூறிக்கொண்டு அரசு இராணுவ நடவடிக்கைகளை முடுக்கி விட்டு வடக்கு—கிழக்குப் பிரதேசத்தையும் மக்களையும் அழிப்பது தொடருமாயின் சமாதான முயற்சிகள் அறுந்து போய் விடும்.

# எவ். பி. ஐ. அதிகாரி கைதானதன் எதிரொலி

# அமெரிக்கா – ரஷ்யா இடையே முறுகல்நிலை; பரஸ்பரம் இராஜதந்திரிகள் வெளியேற்றம்!

மொஸ்கோ, மார்ச் 24

உளவு பார்த்தார்கள் என்ற குற்றச்சாட்டின் பேரில் ரஷ்ய ராஜதந்திரிகள் 50 பேரை நாட்டைவிட்டு வெளியேறுமாறு அமெரிக்க அரசு உத்தரவிட்டுள்ளது.

இதனை அடுத்து ரஷ்ய — அமெரிக்க உறவுகள் முறுகல் நிலையை அடைந்துள்ளன.

பதில் நடவடிக்கையாக 50 அமெரிக்க ராஜதந்திரிகளை வெளியேறுமாறு ரஷ்யா உத்தரவிட்டுள்ளது.

பனிப்போர் காலத்தின் பின்னர் இராஜதந்திர ரீதியில்இரு நாடுகளுக்கும் இடையிலான முறுகல் நிலை மிகப் பெரியளவில் தோன்றி இருப்பது இதுவே முதற்தடவை என்றுதெரிவிக்கப்படுகின்றது.

1986 ஆம் ஆண்டு அட போதைய அமெரிக்க அதிபர் றேகன் 80 சோவியத் இராஜதந்திரிகளை நாட்டைவிட்டு வெளியேற்றினார் அதன் பிறகு பெருந் தொகையான இராஜதந்திரிகள் உளவு பார்த்த குற்றத்துக்காக இப்போதே வெளியேற்றப் படுகின்றனர்.

கடந்த மாதம் ரஷ்யாவுக்காக உளவு பார்த்தார் என்ற குற்றச்சாட்டின் பேரில் அமெரிக்க சமஷ்டிப் புலனாய்வுத்துறையின் அதிகாரி ரொபர்ட் ஹர்ஸன் அமெரிக்க அதிகாரிகளால் கைது செய்யப்பட்டார். சுமார் 15 ஆண்டுகளாக ரஷ்யாவுக்காக இவர் உளவு வேலைகளில் ஈடுபட்டு வந்ததாக அமெரிக்காவால் குற்றஞ்சாட்டப்பட்டுள்ளது.

பனிப்போர் காலத்தின் பின்னர் உளவு வேலைகளில் ஈடுபடுவது இரு நாடுகளிலும் பாரிய குற்றச் செயல்களாகக் கருதப்பட்டு வருகின்றன.

எவ். பி.ஐ. அதிகாரி ரொபர்ட் ஹர்ஸன் கைது செய்யப்பட்டதன் எதிரொலியாகவே அமெரிக்கா ரஷ்ய ராஜ தந்திரிகளை வெளியேற்றியதாகத் தெரிவிக்கப்படுகின்றது.

இதனால் ஆத்திரமடைந்த ரஷ்யா உடனடியாக 50 அமெரிக்கஇராஜதந்திரிகளை வெளியேற்றி உள்ளது.

அமெரிக்காவில் இருந்து ஏற்கனவே 4 ரஷ்ய இராஜதந்திரிகள் வெளியேற்றப்பட்டுள்ளனர் ஏனைய 46 பேரும் எதிர்வரும் ஜூலைக்கு முன்னர் வெளியேற வேண்டும் என உத்தரவிடப்பட்டுள்ளது. (எவ். பி. ஐ)

## 'மிர்' விண்கலம் நேற்று பசுபிக் கடலில் வீழ்ந்தது!

வாஷிங்ரன், மார்ச் 24

15 ஆண்டுகளுக்கு முன்னர் விண்ணில் ஏவப்பட்ட ரஷ்யாவின் 'மிர்' விண்வெளி நிலையம் தனது ஆயுள்காலத்தை முடித்துக் கொண்டு நேற்று பசுபிக் கடலில் வீழ்ந்ததாக அறிவிக்கப்பட்டது.

நேற்றுக் காலை 10.27 மணியளவில் சகாரா பாலைவனத்தின் மேலாக வான் மண்டலத்தில் வெடிக்க ஆரம்பித்த 'மிர்' நிலையம் சுமார் 20 நிமிட நேரம் வான் மண்டலத்தில் வெடித்தபடி இருந்தது.

அதன் பின்னர் புவியீர்ப்பு சக்திக்குள் இழுக்கப்பட்ட சிதறிய துண்டுகள் பகல் 11.22 மணியளவில் நியூஸிலாந்துக்கும் சிலிக்கும் இடையிலான பசுபிக் கடலில் மழையாகக் கொட்டின.

137 டன் எடை கொண்ட 'மிர்' நிலையம் 1500க்கு மேற்பட்ட துண்டுகளாக உடைந்து சிதறியதாக அறிவிக்கப்பட்டுள்ளது. நிலையத்தின் சிதறிய பாகங்கள் 6 ஆயிரம் கிலோ மீற்றர் நீளமும் 200 கிலோ மீற்றர் அகலமும் உள்ள கடற் பிரதேசத்தில் வீழ்ந்ததாகத் தெரிவிக்கப்படுகிறது.

## கலைப்பீட மாணவரின் விளையாட்டு போட்டிகள்

யாழ்ப்பாணம், மார்ச் 24

யாழ். பல்கலைக்கழகக் கலைப்பீட மாணவர்களின் விளையாட்டுப் போட்டிகள் நாளை மறுதினம் திங்கட்கிழமை பிற்பகல் 3 மணிக்கு பல்கலைக்கழக மைதானத்தில் ஆரம்பமாகின்றன.

யாழ் பல்கலைக்கழக ஊழியர்களுக்கும் கலைப்பீட மாணவர்களுக்கும் இடையில் கிரிக்கெட் காட்சிப் போட்டியுடன் ஆரம்பமாகும் இந்த விளையாட்டுப் போட்டிகள் ஏப்ரல் மாதம் 21ஆம் திகதி பரிசளிப்பு விழாவுடன் முடிவடையும் என்று கலைப்பீட மாணவர் ஒன்றியத் தலைவர் ரி. பிரபாகரன் தெரிவித்தார்.

ஏப்ரல் மாதம் 4ஆம் திகதி திடகள விளையாட்டுப் போட்டிகள் ஆரம்பமாகும்.

இதேவேளை —

எதிர்வரும் 27 ஆம் திகதி காலை 7 மணிக்கு 3 ஆம் வருட மாணவருக்கும் முதலாம் வருட மாணவருக்கும் இடையில் ஆண்களுக்கான கூடைப்பந்தாட்டப் போட்டியும், 4 ஆம் வருட பெண்களுக்கும் முதலாம் வருட பெண்களுக்கும் இடையிலான தாச்சிப்போட்டியும் அன்று பிற்பகல் 4.30 மணிக்கு 3 ஆம் வருட ஆண்களுக்கும் 2 ஆம் வருட ஆண்களுக்கும் இடையில் கரப்பந்தாட்டப் போட்டியும் நடைபெறும்.

28 ஆம் திகதி காலை 7 மணிக்கு 3 ஆம் வருட ஆண்களுக்கும் முதலாம் வருட ஆண்களுக்கும் இடையிலான தாச்சிப் போட்டியும், 2 ஆம் வருட பெண்களுக்கும் முதலாம் வருட பெண்களுக்கும் இடையிலான கூடைப்பந்தாட்டப் போட்டியும் நடைபெறும் — என்றும் கலைப்பீட மாணவர் ஒன்றியத் தலைவர் தெரிவித்தார். (ஐ-6)

**யாழ். வண்ணை ஸ்ரீ வைத்தீஸ்வரன் ஆலய வருடாந்த மஹோற்சவ சிறப்பம்சம்**

## நற்பதம் தருபவன்

இராகம் — சண்முகப்பிரியா     தாளம் — ஆதி

பல்லவி

திருவோங்கு வண்ணையில் திகழும் வைத்தீஸ்வரனைத்
தினம் தொழவே நலம் பெருகிடுமே

அனுபல்லவி

பரிவு மிகுந்த தையல் நாயகி அம்மையோடு
பக்தர்கள் போற்றி செய்ய நித்தமும் காட்சி தந்தே
(திருவோங்கும்)

சரணம்

அற்புதமாகவே கொடும்பிணி தீர்ப்பவன்
பொற்பதம் தொழுவோர்க்கு நற்பதம் தருபவன்
நற்றவர் உளமதில் நாளும் திகழ்பவன்
நதிமதி கொன்றையைச் சூடிய சடையினன்
துதி புஷ்கரிணியைத் தீர்த்தமாய்க் கொண்டவன்
(திருவோங்கு)

மீசாலையூர்
ஏ. கே. ஏரம்பமூர்த்தி.

### மொழிப் பிரச்சினை காரணமாக

## சுன்னாகம் பொலீஸில் மக்கள் முறைப்பாடு செய்வதில் சிரமம்

### பிரதிப் பொலீஸ்மா அதிபருக்கு மகஜர்

சுன்னாகம் பொலீஸ் நிலையத்தில் பணியாற்றும் சில பொலீஸ் உத்தியோகத்தர்கள் லஞ்சம் வாங்குவதாகவும்—

அதனைத் தடுத்து நிறுத்த நடவடிக்கைகளை மேற்கொள்ளுமாறும்—

யாழ். பிரதிப் பொலீஸ்மா அதிபருக்கு (டி. ஐ ஜி) அப்பகுதிப் பொதுமக்கள் கையெழுத்திட்டு மகஜர் ஒன்றை அனுப்பியுள்ளனர்.

சுன்னாகம் பொலீஸ் நிலையத்தில் இடம் பெறும் மோசடிகள் மற்றும் நிர்வாகச் சீர்கேடுகள் ஆகியவை தொடர்பாகவும் மகஜரில் குறிப்பிடப்பட்டுள்ளது.

தமிழ் பேசும் பொலீஸார் எவரும் சுன்னாகம் காவல் நிலையத்தில் இல்லாததால் பொதுமக்கள் தமது முறைப்பாடுகளை பதிவு செய்வதில் மிகுந்த சிரமங்களை அனுபவிப்பதாகவும்.

பொலீஸ் நிலைய மட்டத்தில் தீர்க்கக் கூடிய பிரச்சினைகளை கூட மொழி தெரியாத காரணத்தால், பொலீஸார் தீர்த்து வைக்க முடியாத நிலை நிலவுவதாகவும், மொழி புரியாமல் திணறும் பொதுமக்கள் விரட்டப்படுவதாகவும்— மகஜரில் சுட்டிக் காட்டப்பட்டுள்ளது. (க-ஒ)

## மிதிவெடியில் இளைஞன் கால் இழப்பு

யாழ்ப்பாணம், மார்ச் 24

மீசாலைப் பகுதியிலுள்ள வீட்டில் இருந்து பொருள்களை எடுத்து வருவதற்காகச் சரசாலைக் காட்டுப் பகுதி ஊடாகச் சென்ற இளைஞர் ஒருவர் மிதிவெடியில் சிக்கி இடதுகாலை இழந்தார்.

மீசாலை வடக்கில் இருந்து இடம்பெயர்ந்து அல்வாயில் வசித்துவந்த இராசதுரை செந்தூரன் (வயது 19) என்ற இளைஞனே நேற்றுக் காலை 10 மணியளவில் மிதிவெடியில் சிக்கினார். இவர் யாழ். போதனா வைத்தியசாலையில் அனுமதிக்கப்பட்டுள்ளார். (ஐ-6-ரி)

**உதயவாக்கு**

கிடைக்கும் வருமானத்தில் திட்டமிட்டுச் செலவு செய்ய வேண்டும்.

## நாளை

பங்குனி 12

ஞாயிற்றுக்கிழமை

திதி: அமாவாசை காலை 7 . 25 வரை

நட்சத்திரம்: உத்தரட்டாதி மாலை 6 . 49 வரை.

சுபநேரம்: 9 . 15 — 10 . 45

ராகுகாலம்: 4 . 45 — 6 . 15

(பழைய நேரப்படி.)

## விளையாட்டு நிகழ்வுகள்

வடக்கு—கிழக்கு மாகாண கல்வி கலாசார விளையாட்டு அமைச்சின் விளையாட்டுத் திணைக்களத்தினால் யாழ். மாவட்ட பிரதேச செயலகங்களிடையேயான வலைப்பந்தாட்டப் போட்டி இன்று சனிக்கிழமை காலை 8 30 மணிமுதல் யாழ். துரையப்பா விளையாட்டரங்கில் நடைபெறவுள்ளன.

14 பிரதேச செயலகங்கள் இப் போட்டிகளில் கலந்து கொள்ளவுள்ளன. (ஐ—86)

* * *

யாழ். மாவட்ட தாச்சிச் சங்கத்தின் அனுசரணையுடன் கோண்டாவில மறுமலர்ச்சி விளையாட்டுக் கழகத்தினால் நடத்தப்படும் தாச்சிச் சுற்றுப் போட்டியில் இன்று பிற்பகல் 4.00 மணிக்கு நடைபெறும் ஆட்டங்களில் கலந்து கொள்ளவுள்ள அணிகள் வருமாறு:-

மானிப்பாய் ஆனந்தா வி. கழகம் எதிர் உடுவில் ஆலடி சிந்து வி. கழகம். (ஐ—86)

# கண்ணீர் அஞ்சலி

வலி. மேற்கு பிரதேச செயலகத்தைச் சேர்ந்த செல்வி இ. மாலதி அவர்களின் அன்புத் தந்தையார்

## சிற்றம்பலம் தியாகராஜா

அவர்களின் மறைவினால் துயருற்றிருக்கும் அன்னாரின் குடும்பத்தினருக்கு எமது ஆழ்ந்த அனுதாபங்களைத் தெரிவித்து அவருக்குக் கண்ணீர் அஞ்சலிகளைக் காணிக்கையாக்குவதோடு. அன்னாரின் ஆத்மா சாந்தியடைய இறைவனைப் பிரார்த்திக்கின்றோம்.

வலி. மேற்கு பிரதேச செயலக
நலன்புரிச் சங்கம்.

சங்கானை. (85786)



# வீட்டுக்கிருத்திய அழைப்பும் நூல் வெளியீடும்

## அமரர் ஆறுமுகம் பொன்னையா

நாளை (25-03-2001) ஞாயிற்றுக்கிழமை காலை 7 மணி தொடக்கம் எமதில்லத்தில் நிகழும் வீட்டுக் கிருத்திய வைபவத்திலும் நூல்வெளியீட்டிலும் மற்றும் மதியபோசனத்திலும் கலந்துகொண்டு அன்னாரின் ஆத்மா சாந்தியடையப் பிரார்த்திக்கும் வண்ணம் அன்புடன் கேட்டுக்கொள்கின்றோம்.

பொ. குமாரசிங்கம் (மகன்)
கெ. நிர்மலாதேவி (மகள்)

முருகேச பண்டிதர் வீதி,
சுன்னாகம் தெற்கு,
சுன்னாகம். (85771)



கச்சேரி நல்லூர் வீதி, பாணங்குளம்

# நாச்சி அம்மன் தேவஸ்தான மகோற்சவ விஞ்ஞாபனம்

விக்கிரம ஹ 2001

கொடியேற்றம்:
25-03-2001 ஞாயிற்றுக்கிழமை
காலை 10. 00 மணி

சப்பறமும் கற்பூரச்சட்டியும்:
06 04-2001 வெள்ளிக்கிழமை
மாலை 4. 00 மணி

தேர்த் திருவிழா:
07-04-2001 சனிக்கிழமை
காலை 8. 00 மணி

தீர்த்தத் திருவிழா:
08-04-2001 ஞாயிற்றுக்கிழமை
காலை 9. 00,

கொடி இறக்கம்: மாலை 4. 00 மணி

[85754] — ஆலய பரிபாலன சபை.



தொண்டமானாறு

ஸ்ரீ செல்வச்சந்நிதி ஆலய கும்பாபிஷேக தின

# சகஸ்ர மஹா (1008) சங்காபிஷேக உற்சவம்

மெய்யன்பர்களே!

நிகழும் விக்கிரம வருடம் பங்குனி மாதம் 14 ஆம் நாள் (27 - 03 - 2001)

செவ்வாய்க்கிழமை காலை

6 மணிக்கு — சங்கு பூசை
9 மணிக்கு — சங்காபிஷேகம்
10-30 மணிக்கு — சண்முகார்ச்சனை
11-30 மணிக்கு — விஷேட உற்சவம்

அன்றைய தினம் விசேட மங்கள வாத்திய சகிதம் முருகப்பெருமான் திருவீதி உலா வருவார்!

உபயம் - முருகேசசுவாமிகள் தொண்டர்கள்

ஆலய அறங்காவலர்கள்
தங்கராசா அகிலேந்திர ஐயர்.

செல்வச் சந்நிதி,
தொண்டமானாறு.

அன்பளிப்பு:-

ஆலவிருஷம்
ஸ்ரீ வீரபத்திரசுவாமி சமேத ஸ்ரீ ஞானவைரவர் தேவஸ்தானம்
குடத்தனை கிழக்கு, அம்பன்.

பரம்பரை அறங்காவலர்,
மா. கலகராசா,
சுதர்ஷனம்,
நெல்லியடி.

நிந்தனை செய்து வந்து அணைபோட்டவன்
வந்தனை செய்ய வைத்த தமிழ் ஞான சக்திவேல்
சந்நிதிக் கந்தன்.

(85769)


# புலோலி இளைஞர் விபத்தில் பலி

நெல்லியடி, மார்ச் 24

புலோலி இளைஞர் ஒருவர் ரயிலில் மோதுண்டு பலியானார். தண்டவாளத்தைக் கடந்து செல்ல முற்படுகையில் இந்த விபத்து இடம்பெற்றதாகத் தெரிவிக்கப்பட்டது.

இப் பரிதாப சம்பவம் கடந்த திங்கட்கிழமை மாலை 6.15 மணிக்கு தெஹிவளையில் இடம்பெற்றது.

பருத்தித்துறை ஹாட்லிக் கல்லூரியில் கல்வி பயின்றவரான புலோலி கிழக்கைச் சேர்ந்த முத்துக்குமாரு சுந்தரராஜ் (வயது 18) என்பவரே உயிரிழந்தவர் ஆவார்.

(க-109)

# சர்வதேச தொலைபேசிச் சேவை வன்னிப் பகுதியில் விஸ்தரிப்பு

விடுதலைப்புலிகளின் கட்டுப்பாட்டின் கீழ் உள்ள வன்னிப் பகுதியில், சர்வதேச செய்மதி ஊடான தொலைபேசிச் சேவைகள் விஸ்தரிக்கப்பட்டு வருகின்றன என்று வன்னித் தகவல்கள் தெரிவிக்கின்றன.

புதுக்குடியிருப்பில் ஆரம்பித்து வைக்கப்பட்ட இந்தத் தொலைபேசிச் சேவை ஸ்கந்தபுரத்துக்கும் தற்போது மல்லாவிக்குமாக விஸ்தரிக்கப் பட்டுள்ளது என்றும், இதன் மூலம் பொதுமக்களின் போக்குவரத்துப் பிரச்சினைகள் ஓரளவு குறைந்துள்ளன என்றும் தெரிவிக்கப்பட்டது. பொதுமக்களின் துயரச் செய்திகளையும் அவசர தகவல்களையும் உடனடியாகத் தெரியப்படுத்துவதற்கு முன்னுரிமை என்ற அடிப்படையில் இந்தச் சேவை நடத்தப்படுவதாகக் கூறப்படுகிறது.

(க-6)


# படிவம்

க. பொ. த. (சாதாரண தரம்) பரீட்சை 2000 டிசெம்பர் பெறுபேறு மீளாய்வு செய்வதற்கான விண்ணப்பப்படிவம் இலவசமாக வழங்கப்படும்.

விண்ணப்பம் அனுப்புவதற்கான கடித உறை ரூபா 1. 50

பாரதி பதிப்பகம்,
430, காங்கேசன்துறை வீதி,
யாழ்ப்பாணம்.
தொலைபேசி: 3081

[சி/15866]



# தேவை

ஐஸ்கிறீம் வியாபாரிகள் உடன் தேவை. வான், சைக்கிள், வியாபாரிகள் விரும்பத்தக்கது.

தொடர்பு: K. அழகரட்ணம்,
நீர்வேலி கந்தசுவாமி
கோயில் வடக்கு வீதி,
நீர்வேலி தெற்கு.

(85766)



# நன்றியுடன் பாராட்டுகின்றோம்

எமது பாடசாலையின் கட்டடத் திருத்த வேலைகளுக்காக, நிதி ஒதுக்கீடு செய்து உதவிய

வடக்கு புனர்வாழ்வு - புனரமைப்பு,
வடக்கு — கிழக்கு தமிழ் விவகார
இந்து சமய கலாசார அமைச்சர்

## கௌரவ கே. என். டக்ளஸ் தேவானந்தா

அவர்களுக்கும்

ஈ. பி. டி. பி. அமைப்பின் யாழ். மாவட்ட
பிரதான அமைப்பாளரும், நாடாளுமன்ற உறுப்பினருமான

## திரு. கே. வி. குகேந்திரன் (ஜெகன்)

அவர்களுக்கும்

ஈ. பி. டி. பி. அமைப்பின் குருநகர் பொறுப்பாளர்

## திரு. து. இளங்கோ (றீகன்)

அவர்களுக்கும்

யாழ். மாநகரசபை உறுப்பினர்கள்

## திரு. மோ. எட்வேட்
## திரு. எம். கனகரட்ணம்

ஆகியோர்களுக்கும் எமது மனமார்ந்த நன்றியைத் தெரிவித்துக் கொள்கின்றோம்.

அதிபர், ஆசிரியர்கள், மாணவர்கள்,
பாடசாலை அபிவிருத்திச் சங்கம்,
யாழ். புனித றோக்ஸ் றோ. க.
வித்தியாலயம், யாழ்ப்பாணம்.

(சி/15859)



உ
அச்சுவேலி

# கல்பனா வெதுப்பகம் திறப்புவிழா அழைப்பு



அன்புடையீர்,

நிகழும் விக்கிரம வருடம் பங்குனித் திங்கள்
12 ஆம் நாள் ஞாயிற்றுக்கிழமை
25-03-2001
உத்திரட்டாதி நட்சத்திரமும் பிரதமையும்
கூடிய காலை 9.15 மணிமுதல் 10.45 மணி
வரை வரும் சுபவேளையில்

எம்மால் புதிதாக அமைக்கப்பட்ட

## கல்பனா வெதுப்பகத் திறப்பு விழாவில்

தாங்களும் கலந்து உற்பத்தியை ஆரம்பிக்க
கைகொடுக்கும் வண்ணம் அன்புடன்
அழைக்கின்றோம்.



கல்பனா ஸ்ரோஸ்
அன் பேக்கறி,
பிரதான வீதி, அச்சுவேலி
(பஸ் நிலையத்திற்கு அருகில்).

தங்கள் நல்வரவை நாடும்!
வே. சிறிகுமார் (பாபு)

★ சுவைஞர்களுக்கு சிறப்பான உணவகம்
★ வியாபாரிகளுக்குத் தரமான பொருள்களின் கொள்ளிடம்
★ சிறுவர்களுக்கு விருப்பமான தரிப்பிடம்

சுகாதார முறைப்படி தயாரிக்கப்பட்ட

★ கேக் வகை ★ பிஸ்கட் வகை ★ சுவீற் வகை
★ பணிஸ் ★ பாண் வகை ★ மிக்சர் வகை ★ பால்மா வகைகள்
★ அரிசி வகைகள் ★ பல்வேறு பாவனைப் பொருள்களுக்கும்

இன்றே நாடுங்கள்:

## கல்பனா பல்பொருள் விற்பனை நிலையம்

அச்சுவேலி. (சி/15864)

# இலங்கைக்கு ஆதிரை-விக்கி தம்பதியை அனுப்பக் கூடாதெனத் தடை உத்தரவு

## சென்னை உயர்நீதிமன்றம் அறிவிப்பு

சென்னை,மார்ச்24

முன்னாள் இந்தியப் பிரதமர் ராஜீவ் காந்தி கொலை வழக்கில் மரணதண்டனையிலிருந்து விடுதலை செய்யப்பட்ட ஆதிரை - விக்கி தம்பதியினரை இலங்கைக்கு திருப்பி அனுப்பக் கூடாது என்று தமிழக அரசுக்கு சென்னை உயர்நீதிமன்றம் இடைக்கால தடை உத்தரவு விதித்துள்ளது.

இதுபற்றி தெரிய வருவதாவது:

ராஜீவ் கொலை வழக்கில் கைதான இலங்கையைச் சேர்ந்த ஆதிரை, விக்கி ஆகியோர் சிறையில் இருக்கும் போது காதலித்து திருமணம் செய்தனர். சிறையிலேயே இவர்களது திருமணமும் நடைபெற்றது.

இவர்களுக்கு சென்னை தடா நீதிமன்றம் தூக்குத்தண்டனை விதித்த போதிலும் இவர்கள் இதை எதிர்த்து உயர் நீதிமன்றத்தில் மனுத்தாக்கல் செய்தபோது, இதனை விசாரித்த உயர்நீதிமன்றம் இவர்களை விடுதலை செய்தது.

எனினும் இவர்கள் தொடர்ந்தும் அகதி முகாமில் தடுத்து வைக்கப்பட்டு பின்னர் செங்கல்பட்டு அகதிமுகாமுக்கு மாற்றப்பட்டனர்.

கடந்தமாதம் 17 ஆம் திகதி இந்த அகதி முகாமுக்குச் சென்ற தமிழக அரச அதிகாரிகள் சிலர் இவர்ளை இலங்கைக்கு அனுப்பவுள்ளதாகவும் இதற்கு சம்மதம் தெரிவிக்கும் பத்திரத்தில் கையெழுத்துப் போடுமாறு வற்புறுத்தியும், மிரட்டியும் கையெழுத்தைப் பெற்றுச் சென்றுள்ளனர்.

கடந்த பத்தாண்டுகளாக இந்தியச் சிறையில் இருக்கும் இவர்கள், தங்கள் மிகுதி வாழ் நாளை வெளிநாடு எங்காவது சென்று கழிக்கலாம் எனத் திட்டமிட்டு இருக்கையில் இவர்களை இலங்கைக்கு திருப்பி அனுப்ப தமிழக அரசு திட்டமிட்டுள்ளது.

அங்கு எம்மை அனுப்பினால் விமான நிலையத்திலேயே பொலீஸார் எம்மைக் கைது செய்து விசாரிக்கக் கொண்டு செல்வர். பின்னர் எமது பிணத்தைத்தான் திருப்பி அனுப்புவர். அதைவிட இங்கேயே எம்மை தூக்கிலிடலாம்.

கடந்த வருடம் எனது (ஆதிரை) சகோதரர் இங்கு வந்து என்னைச் சந்தித்துவிட்டு இலங்கை திரும்பியிருந்தார். அங்கு விமான நிலையத்தில் வைத்து அவரைக் கைது செய்து விசாரணைக்கு பொலீஸார் கொண்டு சென்றனர். ஒரு வாரத்தின் பின்னர் அவரது உயிரற்ற உடல்தான் கிடைத்தது. இதுபோன்ற நிலைதான் எமக்கும் ஏற்படும்.

இன்னும் சில தினங்களில் எமது கடவுச் சீட்டுக்கள் கிடைத்துவிடும். அதன் பின் நாம் இந்தியாவை விட்டு வெளியேறி விடுவோம். இலங்கையைத் தவிர வேறு எந்த நாட்டுக்கும் செல்ல தமிழக அரசு எம்மை அனுமதிக்க வேண்டும். இலங்கைக்கு அனுப்புவது சுடுகாட்டுக்கு அனுப்புவது போலாகும்.

எனவே எம்மை இலங்கைக்கு அனுப்புவதற்கு தமிழக அரசுக்கு தடை விதிக்க வேண்டும் என அந்த மனுவில் குறிப்பிடப்பட்டிருந்தது.

இந்த மனுக்களை கடந்த புதன்கிழமை சென்னை உயர்நீதிமன்ற நீதிபதி கே.பி. சிவசுப்பிரமணியம் விசாரணைக்கு எடுத்தபோது மனுதாரர்கள் சார்பில் சட்டத்தரணி எஸ். துரைச்சாமி, வி.இளங்கோவன் ஆகியோர் ஆஜரானார்கள்.

மனுவுக்கு இரண்டு வாரத்துக்குள் பதிலளிக்குமாறு தமிழக அரசுக்கு உத்தரவிட்ட நீதிபதி அதுவரை இருவரையும் இலங்கைக்கு அனுப்பக்கூடாதெனவும் தடைவிதித்துள்ளார்.

# 3 சமுர்த்தி ஊழியர்கள் விசாரணை

கொழும்பு,மார்ச்24

மூதூர் பிரதேச செயலர் பிரிவில் கடமையாற்றும் 3 சமுர்த்தி உத்தியோகத்தர்கள் பொலீஸாரால் கடுமையாக விசாரணை செய்யப்பட்ட பின்னர் விடுதலை செய்யப்பட்டுள்ளனர்.

இவர்கள் மூவரையும் மேலதிக விசாரணைகளுக்காக திருகோணமலையில் உள்ள பிரதான பொலீஸ் நிலையத்துக்கு வருமாறு கூறியே விடுவிக்கப்பட்டுள்ளனர் என்று தெரிவிக்கப்பட்டது. (க-6)

# பழையன கழிதலும் புதியன புகுதலும்

இலங்கையில் நேரமாற்றம் செய்யப்பட்ட இரண்டு சந்தர்ப்பங்களிலும் நான் கொழும்பில் இருந்தேன். முதலில், நள்ளிரவிலிருந்து மணிக்கூட்டு முள்ளை ஒரு மணித்தியாலம் முன்னோக்கித் தள்ளி வைக்கச் சொன்னார்கள். பின்னர் அதை மீள் ஆய்வு செய்து அரை மணித்தியாலம் பின்னோக்கித் தள்ளிவைக்கச் சொன்னார்கள்.

இந்த இரண்டு நேரமாற்றங்களின் போதும் கொழும்பிலும் சரி வவுனியா, திருகோணமலை போன்ற பிற மாவட்டங்களிலும் சரி மணிக்கூட்டு முள்ளைத்தான் முன்னும் பின்னுமாக தள்ளி வைத்தார்களே தவிர 'பழைய நேரம் – புதிய நேரம்' என்ற கதையே கிடையாது. முதல் நேரமாற்றத்தின் அடுத்தநாள் கோட்டை ரயில் நிலையம் சென்றபோது விளம்பரப்பலகையிலே புதிதாக எந்தவித அறிவித்தலோ திருத்தமோ காணப்படவில்லை. விசாரித்த போது 'மணிக்கூட்டு முள்ளை தள்ளி வைத்துவிட்டோம், மற்றதெல்லாம் உள்ளபடிதான்' என்றார்கள். பாடசாலை தொடங்கும் நேரத்தை பொறுத்தவரை மட்டும் ஒரு மாற்றம் –அது நேர மாற்றம் அல்ல புதிய அறிவித்தல் செய்திருந்தார்கள். மாணவர்கள் அதிகாலையில் "ரோச் லயிட்" பிடித்துக் கொண்டு போகவேண்டியுள்ளதை தடுக்கும் முகமாக அவைகள் தொடங்கும் நேரத்தில் அரை மணித்தியாலம் அதிகரிப்புச் செய்திருந்தார்கள்.

இந்த நேரமாற்றத்தை அடுத்து, வெகுகாலம் வரை யாழ்ப்பாணத்துடன் தொடர்பு கொண்டால் ஒரே குழப்பமாக இருக்கும். பேச்சுக்கு பேச்சு 'பழைய – புதிய நேரம்' குறித்து கதையளப்பார்கள். நாம் ஒரு நேரத்தில் தொடர்பு கொள்ளச் சொன்னால் அல்லது அவர்கள் ஒரு நேரத்தில் தொடர்பு கொள்ளச் சொன்னால், பல முரண்பாடுகள் ஏற்படும். காரணம் அவர்கள் பழசிலும் நாம் புதிதிலும் இருந்ததுதான்.

இடையில் இங்கு ஒரு 'திக் விஜயம்' செய்து பார்த்தபோதும் இதனை அவதானிக்க முடிந்தது. பத்திரிகை விளம்பரங்கள், துண்டுப்பிரசுரங்கள், அழைப்பிதழ்கள் என்பவைகளிலும் 'பழைய நேரம் – புதிய நேரம் – சீரமைக்கப்பட்ட நேரம்' என்றெல்லாம் அதிகப்படியான சில வார்த்தைப் பிரயோகங்களும் இருந்தன. (ஆனால் இங்குள்ள மணிக்கூடுகள் எந்த நேரத்தைக் காட்டுகின்றன என்பதை மட்டும் அவைகளில் குறிப்பிட மறந்துவிட்டார்கள்)

**நினைக்க...... ......சிந்திக்க**

இதனால் புதிய நேரத்துக்கு பழக்கப்பட்டுவிட்ட என் போன்றவர்கள் இங்கு கைக்கடிகாரம் கட்ட வேண்டியது அவசியமாகிப் போய்விட்டது. இதிலே வேறு 'பழைய குருடி'க் கதை... சிலர் முதலில் நேரம் கேட்பார்கள்... சொன்னதும் 'புதிசோ பழசோ' என்று கேட்கிறார்கள்.

இந்த நேர மாற்றத்தால் அரசாங்கத்திற்கோ நாட்டுக்கோ, மக்களுக்கோ என்ன பலன் கிடைத்தது என்பதை நான் ஆராய வரவில்லை. ஆனால் அதை அனுசரித்து போகாவிட்டால் எமக்கு வீணாக 'நேரம் போகிறது' என்பதையே சொல்ல வருகிறேன்.

இறாத்தல், அவுன்ஸ், யார், அடியிலிருந்து மெற்றிக் முறைக்கு உடனேயே பழக்கப்பட்டுவிட்ட நாம் இதிலே மட்டும் ஏன் பின்தங்க வேண்டும்? யாழ்ப்பாணத்தில் உள்ள அரசாங்கம், வங்கி, தபால், தொலைத் தொடர்பு, பேருந்து சேவை யாவுமே புதிய நேரத்தையே பின்பற்றுகின்றன. மிகவும் தாமதமாக என்றாலும் இப்போது பத்திரிகை விளம்பரங்கள், துண்டுப்பிரசுரங்கள், அழைப்பிதழ்களிலும் பழைய – புதிய நேரம் என்றில்லாமல் நேரம் – (அதாவது புதிய நேரம்) என்றே போடத் தொடங்கியிருக்கிறார்கள்.

இருந்தாலும் முரண்பாடுகளும் குழப்பங்களும் இன்னும் முற்றாகத் தீர்ந்து விட்டதாகச் சொல்லுவதற்கு இல்லை. வங்கி தொடங்குவது 9.00 மணிக்கென்று சிலரும் 8.30 மணிக்கு என்று வேறு சிலரும் கூறுவர். இப்படி ஒரு முரண்பாடு. 'குறிப்பிட்ட நேரத்தில் ஏன் கூட்டத்தை ஆரம்பிக்கவில்லை' என்று கேட்டால் நாம் 'பழைய நேரத்தையே குறிப்பிட்டோம்' என்பர் – இப்படியான ஒரு குழப்பமான சமாளிப்பு.

வெளிநாடுகளுக்கும் நமது நாட்டுக்கும் உள்ள நேர இடைவெளியைச் சீராக்கும் ஒரு நடவடிக்கையாக அறிஞர் ஆர்தர் சி.கிளார்க்கின் ஆலோசனையைக் கருத்திற்கொண்டு தான் பின்னர் அரை மணித்தியால நேர மாற்றம் செய்யப்பட்டதாம். ஆனால் நம்மவர்கள் பணத்தைக் 'கிலோ'வில் பெறுவதற்காக 'ஹலோ' என்று கதைக்கும் போது பழைய" நேரம் – புதிய நேரம் என்றெல்லாம் தடுமாறி 'கிலோ'வை அதன் மூலம் இழக்கிறார்கள் என்பதை எண்ணிப் பாருங்கள்!

இதிலே வேடிக்கையும் இருக்கிறது... சிலர் விக்கிரமாதித்தன் கதையில் வருவது போல வேலையை ஆரம்பிக்கும் போது தாம் பழைய நேரத்தைத் தான் கடைப்பிடிப்பதாகக் கூறுவார்கள். வேலையை முடிக்கும் போது தாம் புதிய நேரத்தையே பின்பற்றுவதாகக் கூறுவார்கள்.

என்ன இருந்தாலும், இவர்கள் புத்திசாலிகள் தான். நேரமாற்றத்தைக் கொண்டு வந்த அரசாங்கத்திற்கு கூட இப்படியோர் 'இலாபம்' கிடைத்திருக்குமா என்பது கேள்விக்குறிதான்.

நேரம் என்றால், அது புதிய நேரம்தான். இனியாவது குழம்பாமலும் குழப்பாமலும் இருக்கக்கூடாதா?

– சுண் அங்கிள்.


புத்தாயிரம் ஆண்டில்

வீரர்களின் மாபெரும் துடுப்பாட்டப் போர்

BATTLE OF THE HEROES

ஸ்கந்தா & மகாஜனா

காலம் : இன்று (24.03.2001) - பிற்பகல் 2.30
நாளை (25.03.2001) - காலை 9.00

இடம் : ஸ்கந்தா மைதானம்



ஸ்கந்தவரோதயக் கல்லூரி அணியினர்
அணித்தலைவர்:
செல்வன் ச.பாலசுப்பிரமணியம்



மகாஜனாக் கல்லூரி அணியினர்
அணித்தலைவர்:
செல்வன் கே.ஜெனார்த்தனன்

கல்லூரி அபிமானிகள், விளையாட்டு ரசிகர்கள் அனைவரையும் அன்புடன் அழைக்கின்றோம்.

ஸ்கந்தவரோதயக் கல்லூரிச் சமூகம்
கந்தரோடை, சுன்னாகம்.

(85789)

# பாரிஸில் இலங்கைத் தூதரகத்தில் பணிபுரிந்த தமிழர் திடீரென நீக்கம்

கொழும்பு,மார்ச்24

பிரான்ஸில் இலங்கைத் தூதரகத்தில் பணியாற்றிவந்த தமிழ் ஊழியர் ஒருவர் திடீரெனப் பதவி நீக்கம் செய்யப்பட்டுள்ளார்.

பாரிஸில் இலங்கைத் தூதரகத்தில் 1990ஆம் ஆண்டு முதல வரவேற்பாளராகப் பணியாற்றி வந்த நடராசா ஜெயபாலன் என்பவரே காரணம் எதுவும் கூறப்படாமல் பதவியிலிருந்து நீக்கப்பட்டுளார்.

பாதுகாப்புக் காரணங்களுக்காகவே இவர் பதவி நீக்கம் செய்யப்பட்டதாகவும் ஜனாதிபதி மாளிகையிலிருந்து இதற்கான உத்தரவு வழங்கப்பட்டதை அடுத்தே தாம் இந்த நடவடிக்கையை மேற்கொள்ள வேண்டியிருந்ததாகவும் தூதரக அதிகாரிகள் அவரிடம் தெரிவித்துள்ளனர்.

1984ஆம் ஆண்டு முதல் பாரிஸ் நகரில் வசித்துவரும் ஜெயபாலன் யாழ்ப்பாணம் நல்லூரைச் சேர்ந்தவர்.

இவரது பிறப்பத்தாட்சிப் பத்திரத்தில் இவரின் பிறப்பிடம் யாழ்ப்பாணம் எனக் குறிப்பிடப்பட்டிருந்ததும் இவரின் பதவி நீக்கத்திற்குக் காரணங்களில் ஒன்று எனக்கூறப்படுகின்றது. (க)

## முதலாம் ஆண்டு நினைவஞ்சலி



திருமதி

### கனகம்மா பொன்னம்பலம்

(அமரர் தாவடி பரமு வைத்தியரின் அன்பு மனைவி)

| மண்ணில் | விண்ணில் |
|---|---|
| 07-04-1912 | 04-04-2000 |

திதி: 24-03-2001

தாவடியூரில் நிறைவான வாழ்க்கையைப் பூர்த்தி செய்து சிவபதமடைந்த எமது அன்புத் தாயாரின் ஆத்மா சாந்தியடைய நாம் அனைவரும் தாவடி அம்பலவான வேத விநாயகரை வேண்டி இந் நாளில் பிரார்த்திக்கின்றோம்.

ஓம் சாந்தி!

உங்கள் பிரிவால் துயருறும்
பிள்ளைகள்,
பேரப்பிள்ளைகள்.

*Dr.பொ.இராமநாதன்*
*"கனகதாரா"*
*தாவடிச் சந்தி,*
*கொக்குவில்.*

(85731)

## வவுனியா முகாம் இளைஞர் சடலமாக மீட்பு

கொழும்பு,மார்ச்24

வவுனியா மகா இறம்பைக்குளம் பகுதியில் செவ்வாய்க்கிழமை மாலை சடலமாக மீட்கப்பட்ட இளைஞர் பேரம்பலம றொசான் (வயது25) என அடையாளம் காணப்பட்டுள்ளார்.

பூந்தோட்டம் நலன்புரி நிலையத்தைச் சேர்ந்த இந்த இளைஞன் சில தினங்களுக்கு முன்னர் இனந்தெரியாத ஆயுதபாணிகளால் கடத்திச்செல்லப்பட்டிருந்தார்.

மகா இறம்பைக்குளம் முந்திரிகைக் காட்டுப் பகுதியில் இருந்து மீட்கப்பட்ட இவ்விளைஞனின் சடலத்தில் ஐந்து துப்பாக்கி சூட்டுக் காயங்கள் காணப்படுவதாகப் பொலீஸார் தெரிவித்தனர்.

இதேவேளை பூந்தோட்ட நலன் புரி நிலையத்தில் இருந்து கடந்த திங்கட்கிழமை இரவு ஜெயசீலன் என்ற இளைஞரும் இனந்தெரியாத ஆயுதபாணிகளால் கடத்திச்செல்லப்பட்டுள்ளதாக மாவட்ட செயலகத்தில் முறையிடப்பட்டுள்ளது. (க)

## விமானத் தாக்குதலுக்கு கண்டனம்

வவுனியா,மார்ச்24

மாத்தளன், சுண்டிக்குளம் பகுதிகளில் விமானப்படையினர் புதன் கிழமை மேற்கொண்ட தாக்குதல்களைக் கண்டித்து முல்லைத்தீவு மாவட்ட அரசசார்பற்ற நிறுவனங்களின் ஒன்றியம் அறிக்கை ஒன்றை விடுத்துள்ளது.

அப்பாவி மக்கள் மீது மேற்கொளப்பட்ட இந்தத் தாக்குதல்கள் போன்று தொடர்ந்தும் சம்பவங்கள் இடம்பெறாமலிருக்க சர்வதேச சமூகம் குரல் கொடுக்க வேண்டும். என்று அந்த அறிக்கையில் தெரிவிக்கப்பட்டுள்ளது. (ஐ)

## இரண்டாம் ஆண்டு நினைவஞ்சலி



### திருமதி தங்கமுத்து கந்தையா

| மலர்வு | உதிர்வு |
|---|---|
| 21-02-1919 | 24-03-1999 |

அன்பின் திருவுருவாய் அனையா
ஒளி விளக்காயிருந்து
எமக்கு வழி காட்டிய
முன்னறி தெய்வமே!
ஆண்டுகள் பல சென்றாலும்
ஆறாது எம் துயரம்.

உங்கள் ஆத்மா சாந்தியடைய
எல்லாம் வல்ல இறைவனைப் பிரார்த்திக்கின்றோம்
ஓம் சாந்தி! சாந்தி!! சாந்தி!!!

பிரிவால் துயருறும்
அன்புக் கணவன், மக்கள்,
மருமக்கள், பேரப்பிள்ளைகள்,
பூட்டப்பிள்ளைகள்.

*'அன்னை இல்லம்'*
*வியாபாரி மூலை,*
*பருத்தித்துறை.*

(85651)

## 31 ஆம் நாள் நினைவஞ்சலியும் நன்றி நவிலலும்

| மலர்வு | | உதிர்வு |
|---|---|---|
| 04 - 05 - 1932 |  | 22 - 02 - 2001 |

அனலைதீவு தெற்கு 6 ஆம் வட்டாரத்தைச் சேர்ந்த

### திருமதி நாகன் நாகி

அன்புடன் எம்மை அரவணைத்து
பண்புடன் பாரினில் வாழவைத்த
எமது அன்புத்தாய்க்கு
எம் இதயம் நிறைந்த அஞ்சலிகள்!

**22-02-2001 அன்று சிவபதமடைந்த எமது குடும்பத்தலைவியின் இறுதிச்சடங்குகளில் கலந்து கொண்டு எங்கள் துக்கத்தில் பங்கு கொண்டு சகல வழிகளிலும் ஆறுதல் கூறி உதவிகள் பல புரிந்தவர்களுக்கும் மற்றும் உற்றார், உறவினர்கள், நண்பர்கள் அனைவருக்கும் திருகோணமலை சீனக்குடா புகையிரத நிலைய அதிபர்கள், சிற்றூழியர்களுக்கும் வவுனியா புகையிரத நிலைய அதிபர்கள், சிற்றூழியர்களுக்கும் எமது மனமார்ந்த நன்றியைத் தெரிவித்துக்கொள்கிறோம்.**

**எமது இதய தெய்வத்தின் அந்தியேட்டிக்கிரியைகள் இன்று (24-03-2001) சனிக்கிழமை 6 ஆம் வட்டாரம், தெற்கு அனலைதீவில் உள்ள அன்னாரின் இல்லத்தில் நடைபெற இருப்பதால் அனைவரும் அதில் கலந்து கொள்ளுமாறு அன்புடன் வேண்டுகிறோம்.**

**கணவர், பிள்ளைகள், மருமக்கள்,**
**பேரப்பிள்ளைகள், உறவினர்கள்.**

தகவல்:
கோ. செல்வரத்தினம்(மருமகன்)
புகையிரதப்பகுதி, சீனக்குடா,
திருகோணமலை.

*6 ஆம் வட்டாரம்,*
*தெற்கு அனலைதீவு.*

(85241)

குமாரிக்கா ஷம்போ குமாரிக்கா ஷம்போ குமாரிக்கா ஷம்போ குமாரிக்கா ஷம்போ குமாரிக்கா ஷம்போ

குமாரிக்கா ஷம்போ




| நெல்லி | அலோவேரா | வேப்பஞ்சாறு |
|---|---|---|
| கேசம் அகாலத்தில் உதிர்வதைத் தடுக்கிறது | கேசம் வரண்டு போகாமல் தடுக்கிறது | கிருமிகளை அழித்து பொடுகை நீக்குகிறது |

குமாரிக்கா ஷம்போவில் மட்டுமே கலந்துள்ள
இயற்கையான கற்றாளைச் சாறு சிரசுக்குக் குளிர்மையைக் கொடுக்கின்றது!
தற்போது 8 ml, 100 ml அளவுகளில் கிடைக்கின்றன!!
விநியோகஸ்தர்கள்:- நூபா பன்முக வர்த்தகம்
104A, ஸ்ரான்லி வீதி, யாழ்ப்பாணம்.
T.P:-2479
(சி15764)

குமாரிக்கா ஷம்போ குமாரிக்கா ஷம்போ குமாரிக்கா ஷம்போ குமாரிக்கா ஷம்போ குமாரிக்கா ஷம்போ

# ஆரோக்கிய வாழ்வுக்கு

குடாநாட்டில் தொடர்ந்து நிலவி வரும் யுத்தச் சூழ்நிலை ஏராளமானோரின் மனோ உலகைச் சிதைத்து விட்டிருக்கிறது.

உளநலப் பாதிப்புக்குட்படுவோரின் எண்ணிக்கை வேகமாக அதிகரித்து வருவதாக அதற்கான சிகிச்சைப் பணியில் ஈடுபட்டு வரும் சேவையாளர்கள் கூறுகின்றனர்.

> குடாநாட்டில் பலருக்கும் பாதிப்பை ஏற்படுத்தி வரும் நீரிழிவு நோய் உட்பட பல நோய்களுக்கு யோகச் சிகிச்சை மூலம் சிறந்த பரிகாரம் காணமுடியும்.
>
> பதகளிப்பு, குருதி அமுக்கம், மூட்டுவலிகள், கை,கால் பிடிப்பு அனைத்துக்குமே யோகக் கலையில் சிகிச்சை உண்டு.
>
> மாணவர்களுக்கு ஞாபக சக்தியை அதிகரிக்கவும் கல்வி ஆர்வத்தைத் தூண்டவும் கூட யோகக் கலையில் சிறந்த பயிற்சிகள் உள்ளன.

நெருக்கீடுகள் அற்ற வாழ்க்கை அது எவருக்கும் கிடைக்காதது. நெருக்கீடுகளுக்கு ஊடாக வாழ்தலே வாழ்க்கை. இந்த நெருக்கீடுகள், உளப் பாதிப்புகளுக்கு யோகக் கலை சிறந்த சிகிச்சை மார்க்கமாக அமைகிறது.

யோகமும் தியானமும் மனிதனை எப்போதும் இயற்கையோடு இணைத்து வைத்திருக்க உதவுகின்றன. இயற்கையுடனான இணையற்ற பிணைப்பே ஆரோக்கிய வாழ்வின் ரகசியம்.

நெருக்கீடுகளில் இருந்து விடுபட விளையும் பலரது கவனம் தற்போது யோகக் கலையின் பக்கம் திரும்பி இருக்கிறது. உளநலம் பாதிக்கப்பட்டவர்களுக்கான சிகிச்சை முறைகளில் ஒன்றாக இந்த யோகம், தியானம் ஆகியவற்றை உள நலச் சிகிச்சைப் பிரிவினர் தற்போது சிபார்சு செய்கின்றனர். யாழ்.பல்கலைக்கழக மருத்துவ பீட உளநல மருத்துவப் பிரிவினரும் நீண்ட காலமாகவே இதனை உணர்த்துவதற்கு முயன்று வருகின்றனர்.


குடாநாட்டில் யோகக் கலை மீதான ஆர்வம் அதிகரித்து வரும் அதேவேளை யோகக் கலையை முறைப்படி பயிற்றுவிக்கும் நிலையங்கள் எதுவும் பெரிய அளவில் நிறுவப்படவில்லை. ஆங்காங்கே ஆர்வமுள்ள பலர் யோகக் கலையைப் பயிற்றுவித்தாலும் கூட யோகக் கலைக்கென நிறுவனமயப் படுத்தப்பட்ட ஒரு நிலையம், பயிற்சிக் கல்லூரி இல்லாதிருப்பதைச் சுட்டிக்காட்டுகிறார் யோகக் கலையில் சிறந்த பயிற்சிகளைப் பெற்றவரும் ஏராளமானோருக்கு அதைப் பயிற்றுவிக்க ஆர்வத்துடன் காத்திருப்பவருமான நல்லூரைச் சேர்ந்த எஸ்.சிவநேஸ்வரராஜா.

யாழ்.மாநகர சபை சுகாதாரப் பகுதியில் கழிவகற்றும் பிரிவுக்குப் பொறுப்பான சுகாதாரப் பரிசோதகராகப் பணிபுரியும் சிவநேஸ்வரராஜா சிறு வயது முதல் பெயர்பெற்ற யோக ஆசான்களிடம் யோகக் கலையைக் கற்றவர். அண்மையில் இவர் விஞ்ஞான ரீதியில் நிருபிக்கப்பட்ட யோகச் சிகிச்சை முறைகளில் விசேட பயிற்சிகளைப் பெறுவதற்காக இந்தியா சென்று திரும்பியுள்ளார்.

பெங்களூரில் உள்ள சுவாமி விவேகானந்தா யோகக் கேந்திரத்தில் உலகெங்கும் இருந்துவரும் யோகக் கலை ஆர்வலர்களுக்கு சிறப்புப் பயிற்சி அளிக்கப்படுகிறது.


இந்நிலையத்தால் நடத்தப்படும் யோகப் பயிற்சியில் உயர்கற்கை நெறிக்கென இந்த ஆண்டு உலகெங்கும் இருந்து தெரிவு செய்யப்பட்ட 51 பேரில் சிவநேஸ்வரராஜாவும் ஒருவர்.

பெங்களூர் சுவாமி விவேகானந்தா யோகக் கேந்திர நிலையத்தில் யோக மருத்துவமனையும், யோகப் பல்கலைக்கழகமும் இயங்குகின்றன. நீண்டகால ஆய்வுகளுக்குப் பின்னர் பல்வேறு நோய்களைக் குணப்படுத்தக்கூடிய யோகப் பயிற்சிகளை இந்த யோகக் கேந்திர நிலையம் விஞ்ஞான பூர்வமாக நிருபித்திருக்கிறது. இத்தகைய முறைப்படியான யோகப்



யோகக் கலையில் சிறப்புப் பயிற்சி பெற்ற எஸ்.சிவநேஸ்வரராஜா

பயிற்சியையே ஆண்டு தோறும் இந்தக் கேந்திர நிலையம் கற்கை நெறிகளாகப் போதித்து வருகிறது.



பெங்களூர் யோகக் கேந்திர நிலையம்.

யாழ்ப்பாணத்தில் இருந்து இப்பயிற்சிநெறிக்கு இந்த ஆண்டு தெரிவு செய்யப்பட்ட சிவநேஸ்வரராஜா இந்திய - இலங்கை பவுண்டேசனின் நிதி உதவியைப் பெற்று பயிற்சியைப் பூர்த்தி செய்துள்ளார்.

இலங்கை - இந்திய பவுண்டேசனைச் சேர்ந்த டாக்டர் பொன்னாவிக்னராஜா, யாழ்.மாநகர சுகாதார வைத்திய அதிகாரி டாக்டர் இ.தெய்வேநதிரன், யாழ்பல்கலைக்கழக உளநல மருத்துவப் பிரிவின் தலைவர் டாக்டர் தயா சோமசுந்தரம் ஆகியோரின் முயற்சியால் யாழ்ப்பாணத்தைச்சேர்ந்த ஒருவருக்கு இந்த வாய்ப்புக் கிடைத்துள்ளது.

## யோகக் கலை

யோகக் கலையை விஞ்ஞான ரீதியில் நிருபிக்கப்பட்ட முறைப்படி தனது அனுபவத்தைக் கொண்டு ஏராளமானவர்களுக்குப் பயிற்சி வழங்க ஆர்வத்துடன் இருக்கும் திரு.சிவநேஸ்வரராஜா நல்லூரில் இலக்கம் 19 பண்டாரக்குளம் வீதியில் உள்ள தனது இல்லத்தில் (யோகி ராஜனின் இல்லம்) தனது குருவும், ஈழத்தின் யோகக் கலை நிபுணர்களில் ஒருவருமான துரைராஜா (யோகி ராஜன்) அவர்களது ஆசியுடனும் ஆதரவுடனும் யோகப் பயிற்சி வகுப்புகளை ஆரம்பித்துள்ளார். ஆர்வமுள்ளவர்கள மேற்படி முகவரியில் தொடர்புகொண்டு பயிற்சி பெறமுடியும் என்று அவர் தெரிவித்தார்.

யாழ்ப்பாணத்தில் யோகக் கலை நூலகம் ஒன்றை ஆரம்பிக்கும் முன் முயற்சிகளிலும் அவர் ஈடுபட்டிருக்கிறார்.

இந்திய - இலங்கை பவுண்டேசன் இதற்கென நிதி உதவிகளை வழங்க முன்வந்துள்ளது. யோகக் கலை தொடர்பான அரிய நூல்கள், பயிற்சிப் புத்தகங்கள், இவை தொடர்பான வீடியோ பிரதிகள் என்பவற்றைக் கொண்டதாக நூலகத்தை அமைக்கும் முயற்சியை அவர் ஆரம்பித்துள்ளார்.

ஆரோக்கியமான வாழ்வுக்கு அரிய வழியான யோகக் கலை வளர்ச்சியடைய வேண்டியது குடாநாட்டின் இன்றைய நிலைமையில் அவசியமான ஒன்றாகும். இதற்கான முயற்சிகளுககு ஆர்வமுள்ளோர் ஆதரவை வழங்க வேண்டும். வழங்குவார்களாக. ✦

# இலங்கையில் 8 ஆயிரம் பேருக்கு 'எயிட்ஸ்' நோய் அச்சுறுத்தல்

கொழும்பு,மார்ச்24

இலங்கையில் 8 ஆயிரம் பேர் எச்.ஐ.வி. தொற்றுக்கு இலக்காகியுள்ளனர் என்று ஐநா. 'எயிட்ஸ்' ஸ்தாபன மதிப்பீட்டு அறிக்கைகள் தெரிவிக்கின்றன.

இந்த நோயினால் 600 சிறுவாகள அநாதைகளாக்கப்பட்டுள்ளதுடன் 95 பேர் நிரந்தர நோயாளிகளாகவும் உள்ளனர்.

எச்.ஐ.வியினால் பாதிக்கப்பட்டவர்களில் ஆயிரத்து 900 பேர் இனங்காண முடியாத நிலையிலும் உள்ளனர் என்று ஐ.நா. ஸ்தாபன ஆலோசகர் டாக்டர் ஹேமா ஜெயவர்த்தன தெரிவித்தார்.

கடந்த வருடம் ஒக்ரோபர் வரையிலும் வயது வந்தோரில் 346 பேரும் சிறுவர்களில் 5 பேரும், வெளிநாட்டுப் பிரஜைகளில் 40 பேரும் எச்.ஐ.விக்கு உள்ளாகியுள்ளனர் என்றும் அவர் கூறினார்.

இந்த நோயினால் கூடுதலாக பெண்களே பாதிக்கப்பட்டுள்ளதால் இலங்கையில் பெண்களுக்கு இந்நோய் பெரும் அச்சுறுத்தலாக இருப்பதாகவும் அவர் சுட்டிக்காட்டியுள்ளார். (க-5-6)

# தாழ்மை என்ற பண்பைக் கடைப்பிடித்து உயர் தவ நெறியைக் காப்போம்

*"தம்மைத் தாழ்த்துவோர் உயர்வு பெறுவர்" (லூக்:18:14)*

'தாழ்மை' என்பது என்ன? அதனை ஏன் எம் மனித உள்ளங்கள் கொண்டிருக்க வேண்டும்? தாழ்மை என்பது மற்றவர்களுக்கு முன்பு நான் அடிபணிந்து, தலை குனிந்து அடிமையாக நிற்கும் நிலையா? எனது அந்தஸ்திலிருந்து கீழ் இறங்கும் நிலையா? இது மனித நோக்கில் ஏற்றுக் கொள்ளக் கூடியதொன்றா? என்ற பல வினாக்கள் இத்'தாழ்மை' நிலைபற்றி எம் உள்ளத்தை நெருடலாம்.

ஆனால் இத்தாழ்மை என்ற பண்பினை மனித கண்ணோட்டத்தில் அல்லாது, இறையொளியில் நோக்குவோமாயின் அதற்குக் கிடைக்கும் அர்த்தம்; "மற்றவர்களின் நல்வாழ்வுக்காக எம்வாழ்வை முழு விருப்பத்தோடு அர்ப்பணித்தல்" - என்பதே, தாழ்மைக்கு கிறிஸ்துபிரான் வகுத்த இலக்கணமாகும்; அது மட்டுமன்று அதனை தமது சிலுவை மரணத்தின் வாயிலாகவும் செயற்படுத்திக் காட்டினார்.

**25ஆம் நாள்**

மற்றவர்கள் வாழ்வுபெற ஒவ்வொருவரும் தம்மைத் தியாகமாக்க வேண்டும் என்பதே இறைவிருப்பம். எமது வாழ்வில் இறைவிருப்பத்தை நிறைவேற்ற வேண்டும் என்ற ஆவல் எம்மை அறியாமலே எமது உள்ளங்களில் எழும்; ஆனால் அது தாழ்மையின் வடிவத்தை ஏற்பதில் தான் என்பதை வெளிப்படுத்தும் ஏனோ எம் கால்கள் பின்னடைகின்றன.

இன்றைய மனித வாழ்வுகள் பின்தள்ளப்படுகின்ற, பழிவாங்கப் படுகின்ற, சீர்குலைக்கப்படுகின்ற நிலைகளுக்கும் இதுவே காரணம்.

**தவக்காலச் சிந்தனை**

மனிதன், தனக்கு அடுத்துள்ளவனும் தன்போன்று வாழவேண்டும் என்ற பரந்த மனப்பாங்கைக் கொள்ளாது சுயநலவட்டத்தில் நின்று சுழல்வதால் ஆகும். அது எம்மையும் வாழ்விக்காது பிறருக்கும் வாழ்வளிக்காது.

மாறாக எனது பதவி, பணம், கௌரவம், பணிகள், பண்புகள் அனைத்தையும் தாராள மனத்தோடு பிறரது நல்வாழ்வுக்காக என்ற நோக்குடன் வாழ எப்போது முன்னிற்கின்றோமோ அன்றுதான் நாம் உயர்வடைவோம். யார் முன்னிலையில் என்றால் சகல வல்லமையுடைய இறைவன் முன்னிலையில்.

ஆகவே நாம் உயர்வடைய வேண்டிய மனிதர் முன்னிலையில் அல்ல; இறைவன் முன்னிலையில் என்பதை உணர்ந்து தாழ்மை என்ற பண்பை எம் வாழ்வில் கடைப்பிடித்து உயர் தவ நெறியினைக் காப்போம்.

**- எஸ்.எம்.வுலோறன்ஸ்**

## சூராவத்தை அம்மனின் நகைகள் திருட்டு

யாழ்ப்பாணம்,மார்ச்24

சுன்னாகம் சூராவத்தை ஸ்ரீ முத்துமாரியம்மன் ஆலயக் கதவு கடந்த புதன்கிழமை இரவு ஊரடங்குச் சட்ட நேரத்தில் உடைக்கப்பட்டு பெறுமதியான பொருள்கள் திருடப்பட்டுள்ளன.

அம்மன் கவசம், இயந்திரம், நகைகள் உட்பட சுமார் ஒன்றரை லட்சம் ரூபா பெறுமதியான பொருள்கள் திருடப்பட்டுள்ளன என்று தெரிவிக்கப்பட்டுள்ளது.

இத்திருட்டுச் சம்பவம் தொடர்பாக ஆலய நிர்வாகிகளினால் சுன்னாகம் பொலீஸ் நிலையத்தில் முறைப்பாடு செய்யப்பட்டுள்ளது. (க-5)

## யாழ்., நல்லூர் கனிஷ்ட பிரிவுப் போட்டிகள்

யாழ்ப்பாணம்,மார்ச்24

நல்லூர் கோட்ட கனிஷ்ட பிரிவு மெய்வன்மைப் போட்டி எதிர்வரும் 27ஆம் திகதி பிற்பகல் 2 மணிக்கு யாழ்.இந்து மகளிர் கல்லூரி மைதானத்தில் நடைபெறவுள்ளது.

யாழ்ப்பாணக் கோட்டத்திற்குட்பட்ட கனிஷ்ட பிரிவு மெய்வன்மைப் போட்டிகள் 28ஆம் திகதி பிற்பகல் 2 மணிக்கு யாழ். இந்து மகளிர் கல்லூரி மைதானத்தில் நடைபெறவுள்ளது. (க-6-9)

# வன்னிப் பகுதி மக்களுக்கு 25 வீத உணவு, மருந்துகளே

## மன்னார் ஆயர் கவலை தெரிவிப்பு

கொழும்பு,மார்ச்24

விடுதலைப் புலிகளின் கட்டுபாட்டிலுள்ள வன்னிப் பகுதியில் மக்களுக்கு 25 வீதமான உணவு, மருந்துப் பொருள்களே அனுப்பி வைக்கப்படுகின்றன என்று மன்னார் ஆயர் இராயப்பு யோசெப் தெரிவித்துள்ளார்.

வன்னிக்கு பொருளாதார தடையில்லை என்றும் உணவுப் பொருள்கள் ஒழுங்காக அனுப்பப்படுகின்றன என்றும் அத்தியாவசிய சேவைகள் ஆணையாளர் நாயகம் தெரிவித்துள்ளது கவலையளிக்கின்றது என்றும் அவர் கூறியுள்ளார். இது தொடர்பாக அவர் மேலும் தெரிவித்துள்ளதாவது:-

எமக்குக் கிடைத்த தகவல்களின்படி வன்னியில் உள்ள மக்களில் பலர் போஷாக்குக் குறைவினாலும், மருத்துவ வசதிகளின்றியும் பாதிக்கப்பட்டிருப்பதாக தெரியவருகிறது. முல்லைத்தீவிலுள்ள மருத்துவர்களின் கணிப்பின்படி வன்னியில் 15 வீதமான பிள்ளைகள் நிறை குறைந்துள்ளனர் என்றும் இதற்குக் காரணம் தாய்மாரின் போஷாக்கு இன்மையே என்று தெரிவிக்கப்படுகிறது.

கிளிநொச்சியில் மட்டும் 12 சிறுவர்கள் போஷாக்கின்மையால் பாதிக்கப்பட்டுள்ளனர் என்றும் அவர் சுட்டிக்காட்டியுள்ளார். (க-5-6)

## கூட்டம்

யாழ்ப்பாணம்,மார்ச்24

தெல்லிப்பழை மகாஜனக் கல்லூரி பாடசாலை அபிவிருத்திச் சங்கத்தின் வருடாந்தப் பொதுக் கூட்டம் எதிர்வரும் 31ஆம் திகதி சனிக்கிழமை காலை 10 மணிக்கு கல்லூரி மண்டபத்தில் நடைபெறவுள்ளது. (க-ரி)

## இம்முறை கப்பலில் 206 தபாற் பொதிகள்

யாழ்ப்பாணம்,மார்ச்24

காங்கேசன்துறைக்கு வியாழக்கிழமை வந்த செஞ்சிலுவை சர்வதேசக் குழுவின் கப்பலில் குடாநாட்டுக்கான வெளியூர்த் தபால்கள் அடங்கிய 206 தபாற்பொதிகள் எடுத்து வரப்பட்டன.

இதே கப்பலில் குடாநாட்டில் சேகரிக்கப்பட்ட தபால்கள் அடங்கிய 72 தபாற்பொதிகள் அனுப்பிவைகக்கப்பட்டதாக தபாற்திணைக்கள அதிகாரி ஒருவர் தெரிவித்தார். (க-10)

## மிதிவெடிகள், வெடிக்காத குண்டுகளால் அனர்த்தம்

# மக்கள் மீள்குடியமர்வுக்கு முன்னர் பாதுகாப்பை உறுதி செய்யவேண்டும்

யாழ்.குடாநாட்டில் அண்மையில் இராணுவ நடவடிக்கைகள் நிகழ்ந்த பகுதிகளுக்குத் திரும்பிச் செல்லும் மக்களின் பாதுகாப்பில் எம்.எஸ்.எவ். (வரையறை எதுவுமற்ற வைத்தியர்கள்) அக்கறை கொண்டுள்ளது.

பல்வேறுபட்ட நிறுவனங்களும் ஊடகங்களும் மிதிவெடி மற்றும் வெடிக்காத குண்டுகள் பற்றிய அபாயம் குறித்துப் பல எச்சரிக்கை விடுத்திருந்தும் கூட மாசி இரண்டாம் வாரத்திலிருந்து மக்கள் கைதடிப் பிரதேசத்துக்கு மீளச் செல்வதற்கு அனுமதிக்கப்பட்டுள்ளனர் .

குடிமக்கள் இப்பிரதேசங்களுக்குப் போவதற்கு அதிகாரமளிக்கப்பட்டுள்ளபோது சர்வதேச அரசசார்பற்ற நிறுவனங்கள் அனுமதிக்காக காத்திருந்தது குறிப்பான ஒரு விடயம்.

பாரிய பாதிப்புக்குள்ளாகியுள்ள இப்பிரதேசம் மிதிவெடி அபாயமற்ற பாதுகாப்பான பிரதேசம் என்பதற்கு எவ்விதமான உத்தரவாதமும் இல்லை, அதற்கும் மேலாக அங்கு அடிப்படை வசதிகள் மீள்குடியமர்தலுக்கு உகந்ததாகத் தெரியவில்லை.

2001 ஆம் ஆண்டு தைமாதம் முதல் மாசி 16 ஆம் திகதி வரை யாழ்.குடாநாட்டில் மிதிவெடியாலும் வெடிக்காத குண்டுகள் போன்றவற்றாலும் பாதிக்கப்பட்ட 14 பேரில் 10 பேருக்கு அங்கம் (கை அல்லது கால்) துண்டிக்கப்படவேண்டியுள்ளது. இது முழு வருட மொத்த சனத்தொகையில் 50 வீதமாக உள்ளது.

**கபிரியேல் ருயில்லோ**

விசேடமாக இராணுவ நடவடிக்கைகளுக்கு உள்ளான பகுதிகளில் மக்களின் பாதுகாப்பை உறுதி செய்யும்படியும் மிதிவெடி தொடர்பான விழிப்புணர்வை ஏற்படுத்தும் படியும் மீளக் குடியமர்வதற்குரிய சூழலையும் நிலையையும் மக்கள் நகர்விற்கு முன் உறுதி செய்யும்படி எம்.எஸ்.எவ். நிர்வாகங்களையும் அவற்றுடன் தொடர்புடைய அதிகாரிகளையும் கேட்டுக்கொள்கிறது.

# சின்னஞ்சிறு விளம்பரம்

## பணிப்பெண் தேவை

வீட்டில் தங்கிப் பணிபுரிய நற்குணமுள்ள பணிப்பெண் தேவை. தொடர்பு:- விள. இல.1245 மே/பா உதயன். (85744)

## தவறிவிட்டது

கந்தையா உபாத்தியாயர் வீதி, கந்தரோடை சுன்னாகம் என்னும் முகவரியைச் சேர்ந்த கணேசன் சுகித்திரா என்பவரது விசேட அ.அட்டை (இல.0906021658) தவறிவிட்டது. கண்டெடுத்தவர்கள் தயவு செய்து மேற்கூறப்பட்ட முகவரியிலோ அல்லது கந்தரோடை கிராம சேவையாளர் (J/200) அலுவலகத்திலோ ஒப்படைத்து உதவவும். (85729)

உயரப்புலம் ஆனைக்கோட்டையைச் சேர்ந்த தங்கவேலு சுகிர்தா என்பவருடைய வி.அ.அ.(இல. 0905024563) கடந்த செவ்வாய்க் கிழமை (20.03.2001) கே.கே.எஸ். வீதிக்கும் யாழ்.நகருக்குமிடையில் தவறிவிட்டது. கண்டெடுத்தவர்கள் ரட்ணம் ஆங்கில மருந்தகத்தில் அல்லது மேற்குறிப்பிட்ட முகவரியில் ஒப்படைத்துதவவும். (85768)

## ENGLISH CLASSES

G.C.E. O/L புதிய பாடத்திட்டம் G.C.E. O/L மீட்டல் வகுப்புக்கள் (பழைய) G.C.E. A/L 2002, 2003 (General English) ஆகிய வகுப்புக்கள் பாடசாலைகளில் ஆங்கிலம் கற்பித்த ஆசிரியரினால் நடத்தப்படும். திரு.அரியரத்தினம், 16, சோமசுந்தரம் அவெனியு, சுண்டுக்குளி. (85764)

## உடன் விற்பனைக்கு

மீன்களுடன் மீன்தொட்டி, பெரிய குத்துவிளக்கு மற்றும் வீட்டுத் தளபாடங்கள் விற்பனைக்குண்டு. சனி, ஞாயிறு தினங்களில் மட்டும் பார்வையிடலாம். தொடர்பு: றிக்கோ பத்மநாதன், 22/3 A, விதானையார் வீதி, சுண்டுக்குளி. (85765)

## ஆங்கிலம் விசேடமாக

O/L இல DISTINCTION, CREDIT பெறுபேறடையவும் A/L, G.A.Q, ஆண்டு 6-10 வகுப்புகளுககும் கற்பிக்கப்படும். ஆசிரியர்:- B.Sc. (cey)Lond Inter தொடர்பு:- 85, சிவன்கோயிலடி (சிவன்கோயில் பின்புறமாக), திருநெல்வேலி. (85690)

## மணமகன் தேவை

இந்து கௌரவ குடும்பத்தைச் சேர்ந்த அழகிய 32 வயது மணமகளுக்கு மணமகன் தேவை. சுயதொழில் புரிபவர் விரும்பத்தக்கது. தொடர்பு கொள்ள வேண்டிய முகவரி: திருமதி நாகமணி பாக்கியம் அராலி வடக்கு, மயிலியப்புலம். (85746)

## விற்பனைக்கு

5 1/2 அடி நீளமும், 2 1/2 அடி அகலமுமான சில்வர் தகடு உள்ளே அடித்த புதிய டீபிறிச்சும், கொழும்பிலிருந்து தருவிக்கப்பட்ட யமஹா-50 மோட்டார் சைக்கிளும் விற்பனைக்கு உண்டு. தொடர்பு: லிங்கம், மானிப்பாய் வீதி, தாவடி. **TP: 2690** (85701)

150 LF வான் கொம்பிறேசர் வாத்து, டீபிறிச் என்ஜின் அத்துடன் தளபாடங்களும் விற்பனைக்குண்டு. தொடர்பு:- ரவி, **K.K.S.** வீதி, சுன்னாகம். (85664)

NATIONAL REFRIGERATOR-MADE IN JAPAN, FLAT BACK, NO FROST விற்பனைக்குண்டு தொடர்பு: கா. செல்வரத்தினம் (நில அளவையாளர்), சம்பந்தர் பிள்ளையார் கோயில் வீதி, ஆனைக்கோட்டை. (85728)

தேக்கம் அலுமாரியும், இரணைக கட்டிலும்(டபிள் பெட்) விற்பனைக்கு உண்டு. சனி,ஞாயிறு பி.ப 4.00- 6.30 இக்குள் இடையில் தொடர்பு கொள்ளவும. **S.**சின்னத்துரை, சொர்ணவடலி பிள்ளையார் கோயில் அருகில் கொக்குவில் மேற்கு. (85741)

சிங்கிள் பேஸ் 3HP மோட்டர் மொறிஸ்மரினா கார் உடன் விற்பனைக்குண்டு. தொடர்பு: K.அழகரட்ணம், நீர்வேலி கந்தசுவாமி கோயில் வடக்கு வீதி, நீர்வேலி தெற்கு. (85767)

நல்ல நிலையில் உள்ள சிசில் R-80, சிசில் டிலெக்ஸ் குளிர்சாதனப் பெட்டிகள் இரண்டு விற்பனைக்கு உண்டு. தொடர்பு: கா.கணேசலிங்கம், 521/12, பருத்தித்துறை வீதி, நல்லூர். (85770)

## கடை விற்பனைக்கு

பலாலி வீதி, ஊரெழு கிழக்கில கடையுடன் சேர்ந்து அமைந்துள்ள வீடு உடன் விற்பனைக்கு உண்டு. (இராசாத்தி கடை, பிள்ளையார் கோயிலுக்கு அருகில்) தொடர்பு:- தே.பிரதீபன், கலைவாணி மில்லேன், பொற்பதி வீதி, கொக்குவில் கிழக்கு. (85659)

## O/L MATHS

ஆரம்ப(கணித) அறிவேயிலலாதவாகளுக்கு இதுவரை சித்தியடையாதவர்களுக்கும் 36 வருடம் அனுபவமுடைய ஆசிரியரினால் 40 மணித்தியாலங்களில் Distinction பெறுபேறடையக் கற்பிக்கப்படும். க.ஆறுமுகநாதன, இல.10, கச்சேரி கிழக்கு ஒழுங்கை, சுண்டுக்குளி. (85655)

## மணமகள் தேவை

எம்மிடம் கௌரவ குடும்பத்தைச் சேர்ந்த மணமகன் 30 வயது, உத்தராடம், 4ஆம் பாதம் பாவம் குறைந்த, Engineer தொழில்புரிபவருக்கு தகுதியான மணமகள் தேவை. எம்மிடம் உள்நாடு, வெளிநாடு பட்டதாரி மணமக்கள் உண்டு. ஜாதகம் படத்துடன் செவ்வாய் தவிர்ந்த நாள்களில் தொடர்பு கொள்ளவும். ஸ்ரீ முருகன் சோதிட நிலையம், நல்லூர் வடக்கு, வீதி. (85644)

## ஆசிரியர் சம்பளம்

சாவகச்சேரி சந்திரபுர ஸ்கந்தவரோதய மகா வித்தியாலய ஆசிரியர்கள் தங்களது சம்பளத்தை எதிர்வரும் 26ஆம் திகதி கரவெட்டி விக்கினேஸ்வரா கல்லூரியில் அல்லது 28 ஆம் திகதி கொக்குவில் இந்துக் கல்லூரியில் வந்து பெற்றுக்கொள்ளலாம் என்று அதிபர் மு.பாலசுப்பிரமணியம் தெரிவித்துள்ளார். (க-ரி)

## நிக்சன் அதிர்ஷ்ட முதலீட்டுத் திட்டம்

நண்பர்களுக்கு மட்டும்

**மாதாந்தக் கட்டுப் பணம் ரூபா 500/=. மாதம் மாதம் 15 ஆம் திகதி அதிர்ஷ்டம் பார்க்கப்படும்.**

**முதலாவது அதிர்ஷ்டசாலிக்கு ரூபா 25000/= உடன் வழங்கப்படும்.**

**அதிர்ஷ்டத்தின் பின்னர் பணம் கட்டத் தேவையில்லை.**

**மேலும் (இலவசமாக) 25 பேருக்கு சிறு அதிர்ஷ்டம் பார்க்கப்படும்.**

**எதிர்வரும் 25.03.2001ஆம் திகதிக்கு முன்பு பணத்தைக் கட்டிப் புத்தகத்தைப் பெற்றுக்கொள்ளவும்.**

**மேலதிக விவரங்களுக்கு தொடர்புகொள்ளவும்.**

**நிக்சன் பல்பொருள் வாணிபம்**


(பஸ்நிலையம் முன்பாக)
அச்சுவேலி. (C/15772)

## திருமண அழைப்பு

அன்புடையீர்!

நிகழும் மங்களகரமான விக்கிரம வருடம் பங்குனி மாதம் 12ஆம் நாள் நாளை (25.03.2001) ஞாயிற்றுக்கிழமை பகல் 11.27 மணி முதல் 12.20 மணி வரையுள்ள உத்தரட்டாதி நட்சத்திரமும் சித்தாமிர்தயோகமும் கூடிய சுப முகூர்த்த சுபவேளையில்

எமது சிரேஷ்ட புத்திரன்
திருநிறை செல்வன்
**பாலமுருகன்**
(நாதஸ்வரம்)அவர்களுக்கும்



எமது கனிஷ்ட புத்திரி
திருநிறை செல்வி
**ஹாயத்திரி**
அவர்களுக்கும்

இறைவன் திருவருள் துணைகொண்டு கோண்டாவில் மேற்கு, ஸ்ரீ மகா கணபதிப் பிள்ளையார் (காளி கோயில்) மண்டபத்தில திருமாங்கல்யதாரணம் செய்யப் பெரியோர்கள் நிச்சயித்திருப்பதால் அத்தருணம் தாங்கள் தங்கள் குடும்ப சமேதராய் வருகை தந்து மணமக்களை ஆசீர்வதிக்கும் வண்ணம் அன்புடன் அழைக்கின்றோம்.

தங்கள் நல்வரவை நாடும்

திரு.திருமதி பொ.சுப்புச்சாமி தம்பதிகள்
(நாதஸ்வர வித்துவான்)
*கலைமகள் வீதி,*
*கல்வியங்காடு, யாழ்ப்பாணம்.*

திரு.திருமதி V.K.கானமூர்த்தி
(நாதஸ்வர வித்துவான்)
*கோண்டாவில் மேற்கு,*
*கோண்டாவில்.*

(85740)

# வட இலங்கை சங்கீத சபையின் பரீட்சை ஏப்ரல் 11 இல் ஆரம்பம்

அகில இலங்கை ரீதியாக ஏப்ரல் மாதம் 11 ஆம் திகதி ஆரம்பமாகும வட இலங்கை சங்கீத சபையினரின் செய்முறைப் பரீட்சைகளுக்கு 12 ஆயிரம் மாணவர்கள் தோற்றவுள்ளனர் என்று வட.இலங்கை சங்கீத சபையின் அதிகாரி ஒருவர் தெரிவித்தார்.

நாடளாவிய ரீதியில் அமைக்கப்பட்டுள்ள 20 பரீட்சை நிலையங்களிலும் ஏப்ரல் மாதம் 11 ஆம் திகதி தொடக்கம் 22 ஆம் திகதி வரை பரீட்சைகள் நடைபெறவுள்ளன.

கர்நாடக சங்கீதம், பரதம் உட்பட சங்கீத துறையுடன் தொடர்புடைய அனைத்து பரீட்சைகளிலும் தரம் 1 தொடக்கம் ஆசிரியர் தரம் வரை பரீட்சைகள் நடைபெறவுள்ளமை குறிப்பிடத்தக்கதாகும். (க-6-9)

## முதலாவது பிறந்த நாள் வாழ்த்து

HAPPY BIRTHDAY



அல்வாய் சின்னாலடியைச் சேர்ந்த
திரு.திருமதி பிறேமராஜா - ஸ்ரீவதனி தம்பதிகளின்
செல்வப் புதல்வி

### செல்வி தேனுஜா

இன்று (24-03-2001) சனிக்கிழமை தனது முதலாவது பிறந்த நாளை அவரது இல்லத்தில் வெகு விமரிசையாகக் கொண்டாடுகின்றார். இவரை அன்பு அப்பா, அம்மா, உற்றார், உறவினர்கள் இறைவன் அருளால் பல்லாண்டு காலம் நீடூழி வாழ்க என வாழ்த்துகிறார்கள்.

*அல்வாய் தெற்கு,*
*அல்வாய்.*
(85604)
திரு.வை.பிறேமராஜா
(அப்பா)

## 31 ஆம் நாள் நினைவஞ்சலியும் வீட்டுக்கிருத்திய அழைப்பும்



அமரர்

### பொன்னர் சின்னத்துரை

[முன்னாள் (29ஸ்ரீ4270) மினிபஸ் உரிமையாளர்]

உதயம் 30-01-1929 — அஸ்தமனம் 22-02-2001

மீளாத்துயில் கொண்ட பாசக் குலவிளக்கே!
ஆறுதல் சொல்ல யாரிருந்தென்ன?
வாயார "அப்பா" என்று அழைத்திட நீங்களில்லையே!
எங்களை வாழ வைத்த தெய்வமே - திங்கள்
ஒன்று ஆகியும் ஆறவில்லை எம் நெஞ்சம்,
அழகுத் திருமுகமும் அன்பான வார்த்தையும்,
காணாமல் அடங்கவில்லை எம் விழி நீர்!
தாங்காத வேதனையில் தாளாமல் தவிக்கின்றோம் நாமிங்கு.

அன்னாரின் இறைபதம் அடைந்த செய்திகேட்டு எமது துயரில் பங்கு கொண்ட உற்றார், உறவினர், நண்பர்கள் தெல்லிப்பழை யாழ்ப்பாணம் (769) சிற்றூர்திச் சங்கத்தினருக்கும், சுன்னாகம் 'றஞ்சனாஸ்' புடைவையகம் அவர்களுக்கும் மற்றும் அனைவருக்கும் எமது நன்றியைத தெரிவிப்பதோடு எமதில்லத்தில் இன்று (24-03-2001) சனிக்கிழமை நடைபெறும் ஆன்ம சாந்திப் பிரார்த்தனையிலும், மதிய போசனத்திலும் கலந்து கொள்ளுமாறு அன்புடன் வேண்டுகின்றோம்.

பிரிவால் துயருறும்
**மனைவி இராசமணியும் பிள்ளைகளும்**
**மருமக்களும் பேரப்பிள்ளைகளும்.**

நிரந்தர முகவரி:
*"துரைமணி இல்லம்"*
*பிரதான வீதி,*
*காங்கேசன்துறை.*

(85747)

தற்காலிக முகவரி:
*சோடாக் கொம்பனி*
*கிழக்கு ஒழுங்கை,*
*மல்லாகம்.*

| | | | |
|---|---|---|---|
| சூ ▲ வெ | சனி | வி | ராகு |
| புத | இராசிச் சக்கரம் | | |
| | | | |
| கே | செ | | சந் |

**மாற்றம்:**
**25-03-2001இல் உத்தரம் கன்னி இராசியில் சந்திரன் நிற்கும்.**
**27-03-2001 இல் புதன் மீனம் இராசிக்கு மாறும்.**

அரசியல் பேச்சு சூடு பிடிக்கும். புதிய அழுத்தங்கள், சட்டதிட்ட மாற்றங்கள் ஆலோசிக்கப்படும். இப்ப என்ன அவசரம்? மெல்ல மெல்லப் போவோம் என்ற நிலை. மக்கள் பயநிலை, புதிய குடியமர்வு, சிலஇடப்பெயர்வு என்பன நடக்கும். விட்டுவிட்டுச் சத்தங்கள் கேட்கும். பயப்பட ஒன்றுமில்லை. இந்தியா திட்ட வரம்பு போடும். இந்தியாவில் அரசியல்வாதிகளிடையே குழப்ப நிலை, மூத்த தலைவர்களுக்கு சோதனைக் காலமாகும். அணு ஆராய்வு, பொருளாதார வளர்ச்சி, வடக்கே யுத்த நிலை, தெற்கே அரசியல் கருத்து வேற்றுமை என்பன வரும். மேற்கு நாடுகள், கிழக்கு, மத்திய கிழக்கு நாடுகளுக்கு தொடர்ந்து பொருளாதார அழுத்தங்களைக் கொடுத்தபடி இருக்கும். சில இயற்கை அழிவுகள் பல செயற்கை அழிவுகள் தொடர இடமுண்டு எனக் கிரக நிலைகள் காட்டுகின்றன.

# இந்த வார இராசி பலன்

# 25-03-2001 - 31-03-2001

## மேடம்

தொழில் பீடங்களில் ஒய்வற்றநிலை — மேலதிகாரிகளின் தலையீடு, புதிய நண்பர்களின் உதவி, அரசியல்வாதிகளின் தலையீடு என்பன இருக்கும். எதிர்ப்பாலார் உதவி செய்து தருவார்கள். தூரதேசத்துச் செய்தி துயரைத்தரும். இடமாற்றமொன்று காத்திருக்கின்றது. குடும்பத்தினருக்காக ஓடியாடித்திரிவார்கள். புதிதாக இடாம்பீகப் பொருள் ஒன்று வாங்குவீர்கள். பொதுத் தொண்டால் புகழ் அடை

## மகாதேவா ஜோதிடம்

வீர்கள்: கைகால் உளைவு, மனப்பதற்றம், வயிற்றுநோ, உஷ்ணபீடைகள் வரலாம். தயிர், பால் சாப்பிடவும். கட்டடப்பொருள் வியாபாரம் தரகுத்துறை, பாதுகாப்புத் துறை, எண்ணெய்த்துறை, போன்ற துறையினர்கள் நன்மை அடைவார்கள்.

★ அதிர்ஷ்ட நாள்:- திங்கள்.

## இடபம்

தொழில் ஸ்தானத்தில் உங்கள் விசுவாசம், திறமைகளை கண்டு சிலர் மனம் புழுங்குவார்கள். அதற்காக மனம் சோராது தொழில்பீடங்களில் புதிய முறைகளைச் செயற்படுத்துவீர்கள். அடிக்கடி கோயில் வாசலுக்குப் போய்வருவீர்கள். பொருள் வரவு, குடும்பத்தவரின் முன்னேற்றம், எதிர்ப்பாலாரின் எதிர்ப்பு, நண்பர் ஒருவரால் ஏமாற்றப்படுதல் என்பன நடக்கும். நெஞ்சு வருத்தம், தொண்டைநோ, தலைவருத்தம், நாரி உளைவு என்பன வரும். அதிகமாக நீர் குடிக்கவும். போக்குவரத்துத்துறை, ரீ. வி. வீடியோதுறை, கொம்பியூட்டர், அச்சுத்துறை, ஹோட்டல்துறை, ஆசிரியத்துறை போன்ற துறையினர்களுக்கு நன்மைகள் அதிகரிக்கும்.

★ அதிர்ஷ்ட நாள்:- திங்கள்.

## மிதுனம்

தொழில் ஸ்தானத்தில் குறைகேட்பீர்கள். நண்பர்கள் கோள் சொல்லுவார்கள். புதிய பணவரவு இருக்கும். அடிக்கடி கோபப்படுவீர்கள். சிலருக்கு ஒரு மந்த நிலையும், பொதுத்தொண்டுகளால் வீணான அலைச்சலும் கொடுக்கும். பொருள்விரயமாகும். துஷ்டரைக் கண்டால் தூரவிலகுவது நன்று. எதிர்ப்பாலாரின் உதவிகள் கிடைக்கும். வாதரோகம், பித்தத்தால் தலைச்சுற்றல், சளித்தொல்லை, வாய்வுத் தொல்லை என்பனவரும், செய்தித்துறை, அரசியல் துறை, தோட்டத்துறை, பாதுகாப்புத்துறை போன்ற துறையினர்களுக்கு நன்மைகள் அதிகரிக்கும்.

★ அதிர்ஷ்ட நாள்:- திங்கள்.

## கடகம்

தொழில் ஸ்தானத்தில் உரிமைப் போராட்டமா? பணவரவு சுமாராக இருக்கும். தூரதேசச் செய்திகளால் நன்மைகள் ஏற்படும். பிரயாணம், இடமாற்றத்தைத் தவிர்க்கவும் வயிற்றுக் கோளாறு, நெஞ்சுநோ, சலவருத்தம், வாய்வு வருத்தம், மனப்பயம் என்பன வரும், அரசியல்துறை, குருத்துறை, எழுத்துத்துறை, நிர்வாகத்துறை போன்ற துறைகளில் தொடர்பானவர்களுக்கு நன்மைகள் அதிகரிக்கும்.

★ அதிர்ஷ்ட நாள்கள்:- திங்கள், சனி.

## சிங்கம்

புத்தி சாதுரியத்தால் எதையும் சமாளிப்பீர்கள். தொழில் ஸ்தானத்தில் புதிய பொறுப்புக்கள் வரும் புகழும், பொருளும் கிடைக்கும். குடும்பத்தில் கலகலப்பு இருக்கும். கண் கூச்சம், நாரிப்பிடிப்பு, அடிக்கடி கோபம், சலவருத்தம் என்பன வரஇடமுண்டு. போக்குவரத்தில் கவனம். இழப்புக்கள் வர இடமுண்டு நண்பர்கள் சிலர் தொல்லை, வீண்பழி சுமத்துவர். சட்டத்துறை, குருத்துறை, ஆராய்ச்சித்துறை, கோவில் வேலைகள் போன்ற துறையினர்களுக்கு மாற்றங்கள் அதிகரித்து, நன்மைகள் கிடைக்கும்.

★ அதிர்ஷ்ட நாள் சனி.

## கன்னி

வாழ்க்கை என்பது அன்பும் நம்பிக்கையும் கலந்த ஒரு நிலையில் அசைந்து செல்லும் இரு உள்ளங்களின் தொடர் பாதையாகும். எனவே நீங்கள் நிதானமாக இருக்கவும். தொழில் ஸ்தானத்தில் பொருள் பிரச்சனை தலை தூக்கும். பிரயாண யோசனை வரலாம். உஷ்ண சளிப்பீடை, கைகால் பிடிப்பு, வாதநோ, மூல, மல, சலவாசல்நோ என்பன கொடுக்கும் கிருமித்தாக்கம் வராது பார்த்துக் கொள்ளுங்கள். கைகாலில் உரசல் காயங்கள் வரலாம் நிதானமாக இருக்கவும் அமைதி சிரிப்பு கலகங்கள் மனப் போராட்டங்களைத் தவிர்க்கும், வியாபாரத்துறை, மரக்கறித்துறை, தோட்டத்துறை, குருத்துறை போன்ற துறையினர்களுக்கு மாற்றங்கள், நன்மைகள் அதிகரிக்கும்.

★ அதிர்ஷ்ட நாள் சனி.

## துலாம்

சில வணங்கா முடிகள் இவ்வுலகில் வாழ்கின்றார்கள். இவர்களின் போக்கு பலருக்குப் பிடிப்பதில்லை. ஆயினும் அவர்கள் உங்களுக்கு பல உதவிகளைச் செய்து தருவார்கள். தொழில் ஸ்தானத்தில் புதிய பொறுப்புக்கள் அதிகரிக்கும். தகுதியானவர்களுக்கு முதலிடம் கொடுப்பீர்கள். பொதுத் தொண்டுகளால் காலநேரம் செலவழியும். ஆனால் புகழ்வரும். பிரயாணத்தைத்தவிர்க்கவும். தலைவலி, களைப்பு, சலம், தோல்வருத்தங்கள். மனப் போராட்டம், நரம்புச்சோர்வு என்பன வரும். எதிலும் அளவறிந்து கொடுக்கல் வாங்கல் செய்யவும். சிலர் மனம் நோகும் வசனங்களைச்சொல்லுவார்கள். சட்டத்துறை, குருத்துறை, அரசியல்துறை, விவசாயத்துறை, பிரயாணத்துறை போன்ற துறையினர்கள் நன்மை அடைவார்கள்.

★ அதிர்ஷ்ட நாள்கள்:- ஞாயிறு காலை 7 30 -க்குப் பின்பு, சனி.

## விருச்சிகம்

தொழில் ஸ்தானத்தில் நிதானமாக நடவுங்கள். புதிய பொறுப்புக்களால் இலாபமும் நன்மையும் நடக்கும். நண்பர் ஒருவர் உதவிதருவார். பிரயாணங்களைத் தவிர்க்கவும். தொண்டை, மூக்கு, முதுகு, நாரிநோக்கள், சலவருத்தம் என்பன வர இடமுண்டு தகுந்த வைத்தியம் சுகமாக்கும். போக்குவரத்தில் கவனம். வைத்தியச் செலவுகள் வரலாம். மலச்சிக்கல் வராது பார்த்துக் கொள்ளுங்கள். பண்ணைத்துறை, பலசரக்குத்துறை. நீதித்துறை, மருந்துத்துறை, கோயில்துறை, பிரயாணத்துறை போன்ற துறையைச் சேர்ந்தவர்களுக்கு இலாபங்கள் அதிகரிக்கும்.

★ அதிர்ஷ்ட நாள்:- ஞாயிறு காலை 7 30-க்குப் பின்பு.

## தனுசு

ஒருவரை நீங்கள் கௌரவிக்காமல்விட்டால் அவர் உங்களுக்கு மதிப்பு அளிக்கமாட்டார். தொழில் ஸ்தானத்தில் உங்களை மதியாமல் சிலர் அலட்சியம் செய்வதைப் பொறுக்கமாட்டீர்கள் பொறுமையாக இருக்கவும். புதியவர்கள்நன்மைகள்செய்துதருவார்கள். அயலவர்களின் பொறுமையால் பல கஷ்டங்கள் வரலாம். புத்தியாக நடந்து கொள்ளுங்கள். இடமாற்றம் இழப்புக்களைத் தரும். குடும்பத்தினருடன் சமாளித்து நடவுங்கள். உரசல் காயங்கள், இடுப்புநோ, வயிற்று நோ, செமியாத்தன்மை, குடல் வருத்தம் என்பனவரும். பித்த மயக்கம் வரும். தேசிக்காய், சர்க்கரை, பயறு என்பன சாப்பாட்டில் சேர்க்கவும். மின்சாரத்துறை, செய்தித் துறை, ரீ. வித்துறை, மருந்துத்துறை, குருத்துறை போன்றதுறைகளைச் சேர்ந்தவர்கள் நன்மை அடைவார்கள்.

★ அதிர்ஷ்ட நாள்கள்:- சனி, திங்கள்.

## மகரம்

தொழில் ஸ்தானத்தில் போட்டிகள் தொடரும். எதிர்ப்பாலாருடன் நிதானமாக இருக்கவும். குடும்பத்தவரில் சிலருக்கு எதிர்பாராத நன்மைகள் கிடைக்கும். பயப்பாடு, இடமாற்ற யோசனைகள் ஏற்படலாம். நரம்புச்சோர்வு, கைகால் உளைவு, வயிற்றுவருத்தம், தோல்வருத்தம், தலைவலி, அதிகயோசனைஎன்பனவரும். கமிஷன்துறை, விவசாயத்துறை, குருத்துறை, பாதுகாப்புத்துறை, சட்டத்துறை போன்ற துறையினர்கள் இலாபங்கள் அடைவார்கள்.

★ அதிர்ஷ்ட நாள்கள்:- திங்கள், சனி.

## கும்பம்

தொழில் ஸ்தானத்தில் நிதானமாக இருக்கவும், என்னபயம்? கடமையைச் சரியாகச் செய்வதுதானே. வீடுமனை, வாகனச் சிறப்பு ஏற்படும் பொதுத்தொண்டு புகழ்தரும் தூரதேசச்செய்தி மகிழ்ச்சிதரும். தொண்டை வரட்சி, இடுப்புவலி, கைகால் வீக்கம், மறதி என்பன வரும். ஆசிரியத்துறை, கலைத்துறை, பாதுகாப்புத்துறை, தோட்டத்துறை போன்ற துறையினர்களுக்கு மாற்றங்களும் நன்மைகளும் கொடுக்கும். இடமாற்றங்களையும் பிரயாணங்களையும் தவிர்த்து நடந்தால் நன்று. அல்லது இழப்புகள் கொடுக்கும்.

★ அதிர்ஷ்ட நாள்கள்:- திங்கள், சனி.

## மீனம்

மூலநட்ஷத்திரகாரர்— யோகமானவர்கள்— இவர்களின் பிடிவாதம், தெய்வ நம்பிக்கைக்கு எவரும் ஈடு கொடுக்க முடியாது. உறுதி படைத்த இவர்களைப் பற்றிச் சிலர் தப்பாகப் பேசுவது தவறானதாகும். எனவே தப்பாகப் பலர் உங்கள் தொழில் பீடங்களிலும் பேசிக் குழப்பிய படி இருப்பார்கள். நீங்கள் நிதானமாக இருக்கவும். சகோதரர் சிறப்பு, குடும்பத்தில் நன்மைகள். வீட்டிலும் தொழில் இடத்திலும் எதிர்பாராத செலவு, சம்பவங்கள் வரும். சமாளித்து நடவுங்கள். கல்லீரல் வியாதி, குடல், மல உபாதை, சளித் தொல்லை, நெஞ்சுநோ, இடுப்புப்பிடிப்பு, சமியாக்குணம் வரும். செய்தித்துறை, போக்குவரத்துத்துறை. மருந்துத்துறை, வியாபாரத்துறையைச் சேர்ந்தவர்களுக்கு நன்மைகள் அதிகரிக்கும்.

★ அதிர்ஷ்ட நாள்கள்:- திங்கள், சனி.

# மரண அறிவித்தல்கள்

## செல்வி கஜனி தேவராஜா

ஜேர்மனியைப் பிறப்பிடமாகவும் வதிவிடமாகவும் கொண்ட செல்வி கஜனி தேவராஜா இறைவனடி சேர்ந்தார்.

இவர் தேவராஜா சசிகலா தம்பதிகளின் செல்வப் புதல்வியும், ஜனனியின் அன்புச் சகோதரியும், காலஞ் சென்ற சந்திரசேகரம்பிள்ளை மற்றும் இராஜேஸ்வரி, தியாகராஜா, சத்தியபாமா ஆகியோரின் அன்புப் பேர்த்தியும், தர்மராஜா, தங்கா, வேல்முருகன், சஞ்சீவ், சந்திரகலா, சிவகலா ஆகியோரின் பெறாமகளும் பவளராஜன், ஞானகலாவாணி ஆகியோரின் மருமகளும் ஆவார்.

அன்னாரின் இறுதிக்கிரியைகள் 25 - 03 - 2001 ஞாயிற்றுக்கிழமை ஜேர்மனியில் நடைபெறும். இவ்வறிவித்தலை உற்றார், உறவினர், நண்பர்கள் அனைவருக்கும் அறியத் தருகின்றோம்.

தகவல்:
S. தியாகராஜா
(Ret G. S)

122/4, பலாலி வீதி,
கந்தர்மடம். (85748)

## சங்கரப்பிள்ளை வேலுப்பிள்ளை

உசன் மிருசுவிலைப் பிறப்பிடமாகவும் வசிப்பிடமாகவும் கொண்ட சங்கரப்பிள்ளை வேலுப்பிள்ளை நேற்று முன்தினம் (22 - 03 - 2001) வியாழக்கிழமை கொழும்பில் காலமானார்.

அன்னார் காலஞ்சென்ற சங்கரப்பிள்ளை—நாகமுத்து தம்பதிகளின் புதல்வனும், சின்னத்தங்கத்தின் அன்புக் கணவரும், காலம் சென்ற சரவணமுத்து மற்றும் வள்ளிப்பிள்ளை, சரஸ்வதி, கணபதிப்பிள்ளை ஆகியோரின் சகோதரனும், நித்தியானந்தசோதி, காலஞ்சென்ற தனலக்குமி மற்றும் பேரின்பசோதி, மகாலக்குமி கருணானந்தன், தயாபரன், ஜெயபரன், செல்வலக்குமி, ஆகியோரின் அன்புத் தந்தையும் ஆவார்.

அன்னாரின் இறுதிக்கிரியைகள் பற்றிய விவரம் பின்னர் அறிவிக்கப்படும்.

தகவல்:
நித்தியானந்தசோதி (வவா)
(மகன்)

தற்காலிக முகவரி:
ச. கணபதிப்பிள்ளை (M P.C S. நீர்வேலி)
நீர்வேலி கந்தசாமி கோயிலடி. (85762)

## செல்லையா அமிர்தலிங்கம்

(இளைப்பாறிய அதிபர்
சண்டிலிப்பாய் ராஜா பாடசாலை)

சண்டிலிப்பாய் தெற்கைப் பிறப்பிடமாகக் கொண்ட செல்லையா அமிர்தலிங்கம், நேற்று முன் தினம் (22-03-01) வியாழக்கிழமை மாலை இந்தியாவில் காலமானார்.

அன்னார் செல்லையா இராசமணியின் சிரேஷ்ட புத்திரனும், அபிமன்னராஜா (சுவிஸ்), காலஞ்சென்ற விஜயலக்சுமி, லீலாவதி, சத்தியபாமா ஆகியோரின் பாசமிகு சகோதரனும், விஜேயரட்ணம், புவனேந்திரன், சத்தியபாமா (சுவிஸ்) ஆகியோரின் மைத்துனரும், திருமதி விவியன், சத்தியசீலன், விஜிதா (சுவிஸ்), வினோதினி ஆகியோரின் அன்பு மாமனாரும் ஆவார்.

அன்னாரின் இறுதிக் கிரியைகள் இன்று (24-03-01) சனிக்கிழமை பிற்பகல் 3 மணியளவில் இந்தியாவில் அவரது இல்லத்தில் நடைபெறும்.

இந்த அறிவித்தலை உற்றார், உறவினர், நண்பர்கள் ஏற்றுக் கொள்ளும்படி கேட்டுக் கொள்கிறேன்.

தகவல்:-
டாக்டர் த. சத்தியசீலன்

சண்டிலிப்பாய் தெற்கு,
சண்டிலிப்பாய். (சி/15862)

# இன்று "கதை நேரம்"

யாழ். பல்கலைக்கழக புறநிலைப் படிப்புகள் அலகும் திரைப்பட வட்டமும் இணைந்து வாராந்தம் வழங்கி வரும் வீடியோ திரைப்படக் காட்சித் தொடரில் இன்று சனிக்கிழமை காலை 10 மணிக்கு புவியியற்துறை மண்டபத்தில் பாலு மகேந்திராவின் 'கதை நேரம்' (தமிழ்ப்படம்) காண்பிக்கப்படவுள்ளது.

இந்தத் திரைப்படத்தை ஆர்வலர்களும் பார்த்து ரசிக்கலாம் என்று அறிவிக்கப்பட்டுள்ளது. (க-ரி)

## 31 ஆம் நாள் நினைவஞ்சலியும் ஆத்ம சாந்திப் பிரார்த்தனையும்



தோற்றம் 1927 — 05 — 10

மறைவு 2001 — 02 — 22

### செல்லத்துரை இராசரத்தினம்

எமது குடும்பத் தலைவரின் இறுதிக் கிரியைகளில் கலந்து கொண்டவர்களுக்கும் அனுதாபச் செய்தி அனுப்பியவர்களுக்கும் மற்றும் பல்வேறு வழிகளிலும் உதவியவர்களுக்கும் நன்றியைத் தெரிவித்துக் கொள்கிறோம்.

அன்னாரின் வீட்டுக் கிரியைகள் (24 - 03 - 2001) இன்று சனிக்கிழமை எமது இல்லத்தில் நடைபெற இருப்பதால் அன்னாரது ஆத்ம சாந்திப் பிரார்த்தனையிலும் மதிய போசனத்திலும் கலந்து சிறப்பிக்குமாறு அனைவரையும் அன்புடன் அழைக்கின்றோம்.

மனைவி,
பிள்ளைகள், மருமக்கள்,
பேரப்பிள்ளைகள், பூட்டப்பிள்ளை,
உற்றார், உறவினர், நண்பர்கள்.

வாதரவத்தை,
புத்தூர். (85804)

## மரண அறிவித்தல்கள்

### வேலன் செல்வராஜா

இல. 34/6, இராமநாதன் வீதியைச் சேர்ந்த வேலன் செல்வராஜா நேற்று (23-03-2001) வெள்ளிக்கிழமை இறைபதம் அடைந்துவிட்டார்.

இவர் எமது சபையின் ஊழியன் சகோ. ஜெனோவின் அன்புத் தந்தையாவார் அன்னாரது அடக்கம் பற்றிய விவரம் பின்னர் அறியத்தரப்படும்.

தகவல்:
போதகர்

கல்வாரி பூரண சுவிஷேச தேவாலயம்,
கொக்குவில். (85792)

### சுப்பிரமணியம் கேதீஸ்வரதாசன்

அரியாலையைப் பிறப்பிடமாகவும் வசிப்பிடமாகவும் கொண்டு, யாழ். மாநகரசபையில் கடமையாற்றி ஓய்வுபெற்ற சுப்பிரமணியம் கேதிஸ்வரதாசன் அவர்கள் நேற்று (23-03-2001) வெள்ளிக்கிழமை காலமானார்.

அன்னார் காலஞ்சென்றவர்களான ஓய்வுபெற்ற தலைமை ஆசிரியர் (பண்டிதர்) சுப்பிரமணியம் - இலட்சுமிப்பிள்ளை தம்பதிகளின் சிரேஷ்ட புத்திரனும் தவமணியின் அன்புக் கணவரும் காலஞ்சென்றவர்களான சிவக்கொழுந்து - பொன்னம்மா தம்பதிகளின் அன்பு மருமகனும் மோகனதாசன், குகவாணி, உதயகுமார், விஜயகுமார், கலாவாணி, இரங்ககுமார், சத்தியவாணி ஆகியோரின் பாசமிகு தந்தையும் பரமேஸ்வரன், குகனேயன், சண்முகலிங்கம், சுசிலா, சிவசோதி ஆகியோரின் அன்புச் சகோதரரும் சயந்தினிதேவி, மாதவராசா, சியாமளா ஆகியோரின் மாமனாரும் செல்வமணி, செல்வராசா, கமலாதேவி, சிவராசா, சிங்கராசா, வரதராசா, தர்மலிங்கம், இரத்தினசிங்கம், குகராணி, கமலாம்பிகை, ஜெந்தி ஆகியோரின் மைத்துனரும் அருந்தவநாதன், யோகராசா (பச்சடி) ஆகியோரின் சகலனும் ரஞ்சித்குமார், லோகதர்சினி, அசோக்குமார், முகுந்தன், நந்தினி, தயாளினி, தயாளன், அபிராமி, ரஜீவன், வரகுணன் ஆகியோரின் பெரியதந்தையும் ஆவார்.

அன்னாரின் இறுதிக்கிரியைகள் இன்று (24-3-2001) சனிக்கிழமை அவரது இல்லத்தில் நடைபெற்றுப் பூதவுடல் தகனக்கிரியைக்காக காலை 10 மணிக்கு (புதியநேரம்) செம்மணி இந்து மயானத்திற்கு எடுத்துச் செல்லப்படும்.

இந்த அறிவித்தலை உற்றார், உறவினர், நண்பர்கள் அனைவரும் ஏற்றுக்கொள்ளவும்.

தகவல்:
மனைவி. பிள்ளைகள்.

75, திருமகள் வீதி,
அரியாலை,
யாழ்ப்பாணம். (85799)

## சமய சந்நிதிகளில்

யாழ்ப்பாணம், மார்ச் 24

வண்ணை ஸ்ரீ வேங்கடேச வரதராஜப் பெருமான் தேவஸ்தானத்தில் இன்று சனிக்கிழமை பிற்பகல் 4.15 மணிக்கு நடைபெறவுள்ள பிரபந்த உரையை சு. மாணிக்கவாசகர் நிகழ்த்தவுள்ளார். (ஐ-6)

★ ★ ★

வல்வெட்டித்துறை ஸ்ரீவாலாம்பிகா சமேத வைத்தீஸ்வரக் கோயில் வருடாந்த உற்சவம் இன்று சனிக்கிழமை கொடியேற்றத்துடன் ஆரம்பமாகிறது.

இரதோற்சவம் ஏப்ரல் மாதம் 7 ஆம் திகதி சனிக்கிழமையும் ஊறணியில் சமுத்திர தீர்த்தோற்சவம் மறுநாள் 8 ஆம் திகதி ஞாயிற்றுக்கிழமையும் நடைபெறும். (ஐ-173)

## பாலர் பேச்சுத் திறன் போட்டி

பாலர் கல்விக் கழகத்தின் கீழ் இயங்கும் பதினாறு பாலர் பாடசாலைகளுக்கிடையிலான பேச்சுத் திறன் காண் போட்டி இன்று காலை 9 மணிக்கு பெருமாள் கோயிலடியில் உள்ள சன்மார்க மகாவித்தியாலயத்தில் இடம்பெறும். (ஐ—3)

## நல்லூர் பிரதேச சபை விளையாட்டுப் போட்டி

யாழ்ப்பாணம், மார்ச் 24

நல்லூர் பிரதேச சபையின் ஏற்பாட்டில் மாபெரும் விளையாட்டுப்போட்டி நடைபெறவுள்ளது.

இந்தப் போட்டிகளில் பங்குபற்ற விரும்புபவர்கள் எதிர்வரும் 30 ஆம் திகதிக்கு முன்னர் விண்ணப்பங்களை அனுப்பும்படி பிரதேச சபைத் தலைவர் க. மணிபல்லவராஜன் கேட்டுள்ளார். (ஐ-3)

## மெய்வன்மை போட்டிகள்

நெல்லியடி, மார்ச் 24

தும்பளை சிவப்பிரகாச மகாவித்தியாலய, ஆரம்ப பிரிவு மாணவர்களுக்கான இல்ல மெய்வன்மைப் போட்டி இன்று சனிக்கிழமை பிற்பகல் 2.30 மணிக்கு அதிபர் ம. கணபதிப்பிள்ளை தலைமையில் நடைபெறும்.

பிரதம விருந்தினராக வடமராட்சி கல்விப் பணிப்பாளர் சி. சிவராசா கலந்து கொள்வார். (க 109)

★ ★ ★

பருத்தித்துறை, மார்ச் 24

மாதனை மெதடிஸ்த மிசன் தமிழ்க் கலவன் பாடசாலையின் வருடாந்தமெய்வன்மைப் போட்டி நாளை ஞாயிற்றுக்கிழமை அதிபர் மு. செல்வராசா தலைமையில் நடைபெறும்.

வடமராட்சி வலய உதவிக் கல்விப் பணிப்பாளர் கே. கமலானந்தன் பிரதம விருந்தினராக இப் போட்டியில் கலந்துகொள்வார். (118)

## ஆச்சேஸ் விழா

யாழ்ப்பாணம், மார்ச் 24

கத்தோலிக்க பொது நிலையினரின் மரியாயின் சேனை —ஆச்சேஸ் விழா நாளை ஞாயிறு காலை 10 மணிக்கு யாழ். அடைக்கல அன்னை ஆலயத்தில் நடைபெறவுள்ளது.

மரியாயின் சேனை அங்கத்தவர்களின் பிரதான நிகழ்ச்சியான இவ் விழாவில் மரியாயின் சேனை அங்கத்தவர்கள் அனைவரையும் கலந்து கொள்ளுமாறு அறிவிக்கப்பட்டுள்ளது. (ஐ—6)

## யாழ்ப்பாணப் பல்கலைக்கழகம் இலங்கை

கலைப்பீட மூன்றாம் வருட மாணவர்களுக்கான

### விசேட பொதுக்கூட்டம்

நாள்: 28-03-2001 புதன்கிழமை
நேரம்: பிற்பகல் 2 மணி
இடம்: முகாமைத்துவ மண்டபம் (M H2)
விடயம்: கலைப்பீட மாணவர் ஒன்றியத்திற்கான மூன்றாம் வருடப் பிரதிநிதிகளைத் தெரிவு செய்தல்

அனைவரும் தவறாது கலந்து கொள்ளவும்.

– கலைப்பீடாதிபதி.

(சி/15867)

## சித்தன்கேணி இளைஞர் முன்னேற்றக் கழகத்தினதும் சனசமூக நிலையத்தினதும் 45-ஆவது ஆண்டு நிறைவு விழா

இடம்:- சித்தன்கேணி ஸ்ரீ மகா கணபதிப் பிள்ளையார் கோயில் வீதி.
காலம்:- இன்று (24-3-2001) சனிக்கிழமை

தலைவர்:- தி. சஞ்ஜேதனன் அவர்கள்

பிரதம விருந்தினர்;

திரு. ந. திரிலோகநாதன் அவர்கள்
(வலிகாமம் மேற்கு பிரதேச சபைத்தலைவர்)

சிறப்பு விருந்தினர்!

திரு. மா. புலேந்திரன் அவர்கள்
(பிரதேச சபைச் செயலாளர், சுழிபுரம்)

திரு. நா. வேதநாயகன் அவர்கள்
(பிரதேச செயலர், சங்கானை)

### கௌரவ விருந்தினர்கள்

திரு. V. K. விஜயரட்ணம் J. P, திரு. N. பரமநாதன் J. P
திரு S. தெய்வேந்திரம் (சிவன் ஆலயத் தலைவர்)
திரு. சி. நவரட்ணம் (கிராமசேவையாளர் சித்தன்கேணி)
திரு S. ஸ்ரீதரன் (கிராம சேவையாளர் வட்டு, கிழக்கு)
திருமதி. K. சிவசோதி (சனசமூகநிலைய உத்தியோகத்தர்)
திரு. மு பத்மநாதன் (பிள்ளையார் கோயில் தலைவர்)
திரு. A. மார்க்கண்டேயர் J. P
திரு. S. கமலநாதசர்மா (சித்தன்கேணி பிள்ளையார் ஆலய சிவாச்சாரியார்)
திரு. G சபாரட்ண சர்மா (சித்தன்கேணி சிவன் ஆலய சிவாச்சாரியார்)
பிரம்மஸ்ரீ கு. ஜெகதீஸ்வரக் குருக்கள்

### நிகழ்ச்சி நிரல்

| | |
|---|---|
| நேரம் 4-30 | மங்கள இசை-சித்தன்கேணி கலைஞர்கள் |
| 5-00 | தலைமை உரை |
| 5-10 | கழக போசகர் திரு. க. ஸ்கந்தராஜா உரை |
| 5-20 | பிரதம விருந்தினரை பொன்னாடை போர்த்திக் கௌரவித்தல் |
| 5-35 | திரு. V. K. விஜயரட்ணம் திரு. N. பரமநாதன் திரு. A மார்க்கண்டேயர் ஆகியோரைக் கௌரவித்தல் |
| 5-50 | பிரதம விருந்தினர் உரை |
| 6-20 | எமது ஊர் சமாதான நீதிவானாக அண்மையில் பதவி பெற்ற கழக கௌரவ உறுப்பினர்களின் உரை |
| 6-40 | சிறப்பு விருந்தினர் உரை |
| 7-00 | பரிசளிப்பு வைபவம் |
| 8-00 | பல்லிசை கதம்பம் |
| 9-00 | நாட்டியாஞ்சலி |
| 9-30 | இசைமாலை |
| 10-00 | நாடகம் |

### "கல்யாண ஆசை"

(கழக உறுப்பினர்களின் நகைச்சுவை நாடகம்)

ஆக்கம்: ந. நாகராசா

12-00 யாழ் ராகம்ஸ் இசைக் குழுவினர் வழங்கும்

### "இன்னிசை கானமழை"

குறிப்பு: விழா நடைபெறுகின்ற இந்த நேரம் வலிகாமம் மேற்குப் பகுதியில் ஊரடங்கு அமுலில் இருக்க மாட்டாது.

–நிர்வாகம்

(சி/15869)

# 31 ஆம் நாள் நினைவலைகள்



| அளிப்பு | பறிப்பு |
|---|---|
| 16 - 06 - 1996 | 22 - 02 - 2001 |

## செல்வ அனுஷியா விக்கினேஸ்வரராசா

பாசமழை பொழிந்திங்கே பாரினிலே மகிழ்ந்திருக்க
பாதியிலே நோய்வடிவில் காலனவன் பறித்திட்டான்
பாவியர் நாம் பரிதவித்துக் கலங்குகின்றோம்
பாச மகளே! மீண்டும் பிறப்பெடுத்து வாராயோ?
*ஆத்மா சாந்தியடையப் பிரார்த்திக்கும்:*

*ஏழாலை தெற்கு,*
*களவாவோடை.* (C/15868) குடும்பத்தினர்.


## கிறிஸ்ரல் சென்ரர்

நெல்லியடி
A/L 2001 DAY CLASS
பொருளியல் II
பணமும் வங்கியும்
S.வரதராஜன்
ஆரம்பம்: 26.03.2001
மு.ப.8.30 - பி.ப 1.00 மணி வரை
Note: இடவசதியைக் கருத்தில் கொண்டு அனுமதி வரையறுக்கப்பட்டுள்ளது.
2002 A/L புதிய பிரிவு கலை, வர்த்தகம் ஆரம்பமாகின்றது!
O/L DAY CLASS
ஆரம்பம்: 27.03.2K1
மு.ப.8.30 - பி.ப 1.00
Note: பாடசாலை போல் வகுப்புகள் நடைபெறும். (85798)


முருகன் துணை

# திருமண வாழ்த்துக்கள்

அன்புடையீர்!

நிகழும் மங்களகரமான விக்கிரம வருடம் பங்குனித் திங்கள் 13ஆம் நாள் (26.03.2001) திங்கட்கிழமை காலை 9.20 மணி முதல் 10.40 மணிவரையுள்ள சுபவேளையில் 5A, திருவள்ளுவர் தெரு, டிராங்க் றோட், போரூர், சென்னை – 600116, P.R.R. திருமண மண்டபத்தில்



| | |
|---|---|
| கரந்தன் வீதி, நீர்வேலி | உரும்பிராய் தெற்கு, |
| திரு.திருமதி சிவபாலன் - தவமணி | திரு.திருமதி சரவணபவானந்தன் - இராணி |
| தம்பதிகளின் புத்திரன் | தம்பதிகளின் புத்திரி |
| திருநிறை செல்வன் | திருநிறை செல்வி |
| *கவிமித்திரன் (கனடா)* | *சுகன்யா* |
| அவர்களுக்கும் | அவர்களுக்கும் |

இறைவன் துணைகொண்டு திருமணம் நிகழவுள்ளதால் மணமக்கள் சீருடன் சிறப்புப்பெற மனமார வாழ்த்துகின்றோம்.

இருவீட்டார் உற்றார், உறவினர், நண்பர்கள் சார்பில்
*நீர்வேலி தெற்கு, நீர்வேலி.* **வே.கா.கணபதிப்பிள்ளை.** (85803)

# திருமண அழைப்பு

அன்புடையீர்!

ஸ்வஸ்தி ஸ்ரீ நிகழும் மங்களகரமான விக்கிரம வருடம் பங்குனித் திங்கள் 12ஆம் நாள் (26.03.2001) திங்கட்கிழமை ரேவதி நட்சத்திரமும் சித்தயோகமும் கூடிய காலை 11.14 மணி முதல் 01.14 மணிவரையுள்ள சுபமுகூர்த்தத்தில்

| | |
|---|---|
| எமது கனிஷ்ட புத்திரன் | எமது கனிஷ்ட புத்திரி |
| திருநிறை செல்வன் | திருநிறை செல்வி |
| *ஸ்ரீதரன் (ஸ்ரீ)* | *ஆனந்தினி (ஆனந்தி)* |
| அவர்களுக்கும் | அவர்களுக்கும் |

கொக்குவில் பொற்பதி விநாயகப் பெருமான் திருவருளுடன் திக்கம் மணமகள் இல்லத்தில் பாணிக்கிரகண கன்னியாதான மாங்கல்யதாரணம் செய்யப் பெரியோர்களால் நிச்சயித்து இருப்பதால் அத்தருணம் அனைவரும் குடும்பசமேதரராக வருகை தந்து மணமக்களை ஆசீர்வதிக்கும் வண்ணம் அன்புடன் அழைக்கின்றோம்.

*இங்ஙனம் தங்கள் நல்வரவை நாடும்*

**திரு.திருமதி ந.தியாகராஜக் குருக்கள்**
**இரத்தினேஸ்வரி தம்பதிகள்**
(பொற்பதி விநாயகர் தர்மகர்த்தா)
*பூநாறி மரத்தடி,*
*கே. கே. எஸ். வீதி, கொக்குவில்*

**திரு.திருமதி சிவானந்தஐயர்**
**குடும்பத்தினர்**
*துளாயி பிள்ளையார் கோயிலடி,*
*திக்கம்.*

குறிப்பு: மணமகன் இல்லம் காலை 6 மணி சமாவர்த்தனம்
மணமகன் இல்லம் மாலை 4 மணி மணமக்கள் வரவேற்பு
(இருவீட்டார் அழைப்பு) (85802)


# Institute of Informatic Studies

**Jaffna, Sri Lanka**
**(Affiliated to Irish International University, Dublin)**
T.P.:021 - 2831 E-Mail: iis@sltnet.lk

அயராத சேவையின் ஒரு பரிமாணம்

**புதிய கற்கை நெறிகள் ஆரம்பம்: 28.03.2001 பகல் 10.00மணி**

**IIS சங்கானைக் கிளை**

பல்வேறு நவீன கணனித் தொழில்நுட்ப வசதிகளுடன் புதிய கட்டடத் தொகுதியில் எதிர்வரும் 28.03.2001 புதன் அன்று பகல் 10.00 மணிக்கு ஆரம்பித்து வைக்கப்படவுள்ளது. கல்வியாண்டு 2001 க்கான கற்கை நெறிகளும் அன்றைய தினமே ஆரம்பிக்கப்படும் என்பதனை மாணவ உலகுக்கு அறியத் தருவதில் பெருமகிழ்வடைகிறோம்.

| Diploma Courses | Duration |
|---|---|
| Diploma in MS Office 2000 | 5 Months |
| Diploma in Computer programming | 8 months |
| Technician Diploma in Computer Hardware | 6 Months |

**Certificate Courses**

| | |
|---|---|
| Excel | powerpoint |
| Access | Visual Basic |
| Word | Visual C |

சகல மாணவர்களையும் கணனியுலகிற்குள் புகுத்தும் நோக்குடன் விசேட கட்டண சலுகைகள் வழங்கப்படும்.

தொடர்புகளுக்கு: **IIS**, பிரதான வீதி, சங்கானை.

(C/15873)


# நினைவஞ்சலியும் வீட்டுக்கிருத்திய அழைப்பும்

24.02.2001 சனிக்கிழமை இடம்பெற்ற நாவலர் ச.ச.நிலைய பொன்விழா நிறைவின்போது சிவபதமடைந்த



## திருமதி இராசன் மலர்

| பிறப்பு: | இறப்பு: |
|---|---|
| 03.02.1950 | 24.02.2001 |

நாளை (25.03.2001) ஞாயிற்றுக்கிழமை எமது இல்லத்தில் நிகழவிருக்கும் வீட்டுக்கிருத்திய நிகழ்விலும் ஆத்மசாந்திப் பிரார்த்தனையிலும் அதனைத் தொடர்ந்து நடைபெறும் மதியபோசன நிகழ்விலும் கலந்து கொள்ளுமாறு உற்றார், உறவினர், நண்பர்கள் அனைவரையும் அன்புடன் அழைக்கின்றோம்.

*"இன்பபவனம்"*
*நாவலடி,* மகன் - இ.இராஜேஸ்வரன்
*உடுப்பிட்டி.* (85772) (மந்திகை ஆதார வைத்தியசாலை - ஊழியர்)

# மரண அறிவித்தல்கள்

## செல்வன்
## குமாரகுலசிங்கம் கிஸ்ணசோதிவேல்
## (கிட்டு - லண்டன்)

சோழங்கன், கரணவாய் மேற்கைப் பிறப்பிடமாகவும் லண்டனை வதிவிடமாகவும் கொண்ட குமாரகுலசிங்கம் கிஸ்ணசோதிவேல் (கிட்டு) 21.03.2001 புதன்கிழமை காலமானார்.

அன்னார் சங்கானையைப் பிறப்பிடமாகவும் கரணவாய் மேற்கை வசிப்பிடமாகவும் கொண்ட செ.குமாரகுலசிங்கம் - காலஞ்சென்ற வள்ளியம்மை தம்பதிகளின் அருந்தவப்புதல்வரும் திருமதி பொன்னம் பலதாஸ் வரதராணி (U.K.)இன் அன்புச் சகோதரரும், க.பொன்னம் பலதாஸ்(U.K.) அவர்களின் பாசமிகு மைத்துனரும், ஜனனி, ஆரணி (U.K.) ஆகியோரின் பாசமிகு மாமனாரும் ஆவார்.

அன்னாரின் இறுதிக்கிரியைகள் 40, TUDOR COURT SOUTH, WEMBLEY MIDD-XHA 965 E LONDON என்னும் விலாசத்தில் 25.03.2001 ஞாயிற்றுக்கிழமை இலங்கை நேரம் இரவு 8.15 மணிக்கு நடைபெறும்

இவ்வறிவித்தலை உற்றார், உறவினர், நண்பர்கள் அனைவரும் ஏற்றுக்கொள்ளவும்.

*'ராணி வேல் இல்லம்'*
*சோழங்கன்,*
*கரணவாய் மேற்கு,*
*கரவெட்டி.*

தகவல்:
செம்பொற்சோதி குமாரகுலசிங்கம்
(பப்பா சாஸ்திரி - தந்தை) (85804)

## முருகேசு சீவரத்தினம்

கருங்காலி, காரைநகரைச் சேர்ந்த முருகேசு சீவரத்தினம் (முன்னாள் வர்த்தகர் - கடவத்தை) கொழும்பில் 22.03.2001இல் காலமானார்.

அன்னார் பரிமளத்தின் அன்புக் கணவரும் நாகரத்தினம் (ஆசிரியர் ஹைலண்ட்ஸ் மகாவித்தியாலயம் - ஹற்றன்), விஜயரத்தினம் (வவுனியா), நாகேஸ்வரி (கொழும்பு), செல்வரத்தினம் (வெற்றிலையூர்), இரத்தினகுமார் (ஹற்றன்) ஆகியோரின் அன்புத் தந்தையும் நகுலேஸ்வரி (ஹற்றன்), கிருஷ்ணபிள்ளை (கொழும்பு) ஆகியோரின் மாமனாரும் ஆவார்.

அன்னாரின் இறுதிக் கிரியைகள் 23.03.2001இல் கொழும்பில் நடைபெற்றன.

*சு.ஐயம்பிள்ளை,*
*தட்டாம் புலம்,*
*வலந்தலை,*
*காரைநகர்.* (C/15874)

தகவல்:
சு.கணேசமூர்த்தி.
(பெறாமகன்)

## க.குமாரசாமி

உரும்பிராய் சரஸ்வதி சனசமூக நிலையத் தலைவரும், உரும்பிராய் சைவத்தமிழ் வித்தியாலய அபிவிருத்திச்சபை உறுப்பினரும், கிராமிய உழைப்பாளர் சங்கத்தின் செயற்குழு உறுப்பினரும், சுதேசிய கலாமன்ற உறுப்பினரும், பிரபல சமூக சேவையாளருமாகிய க.குமாரசாமி நேற்று (23.03.2001) வெள்ளிக்கிழமை கொழும்பில் காலமானார்.

அன்னார் தங்கரத்தினத்தின் அன்புக்கணவரும், வை.கந்தன் - தங்கமுத்து ஆகியோரின் புதல்வனும், ரஜீதன், துசிதன், தர்ஷனா, தெல்லிப்பழை யூனியன் கல்லூரி மாணவர்களான, கஜீதன்(க.பொ.த., உ.தரம்); கஜீனா (தரம்11), சுவீதன் (உரும்பிராய் சைவத்தமிழ் வித்தியாலய மாணவன்) ஆகியோரின் அன்புத் தந்தையும் ஆவார்.

அன்னாரின் இறுதிக்கிரியை பற்றிய விவரம் பின்னர் அறிவிக்கப்படும்.

இவ்வறிவித்தலை உற்றார், உறவினர், நண்பர்கள் யாவரும் ஏற்றுக் கொள்ளவும்.

*சரஸ்வதி சனசமூக நிலையம்,*
*உரும்பிராய் வடக்கு.* (C/15877)

தகவல்:
கு.ரஜீதன்
(மகன்)

## வடக்கின் மாபெரும் கிரிக்கெட்:

# சளைக்காமல் பதில் தரும் தீவிர முயற்சியில் சென்றல்

சென்றல் - சென்ஜோன்ஸ் அணிகளுக்கிடையில் நேற்று ஆரம்பமான 'வடக்கின் மாபெரும் கிரிக்கெட் மோதலில்' முதலில் துடுப்பெடுத்தாடிய சென்ஜோன்ஸ் அணி 8 விக்கெட் இழப்புக்கு 280 ஓட்டங்களைப் பெற்று ஆட்டத்தை நிறுத்திக் கொணடது.

தொடர்ந்து ஆடிய சென்றல் அணி ஆட்டநேர இறுதியில் ஒரு விக்கெட் இழப்புக்கு 67 ஓட்டங்களைப் பெற்றது.

சென்.ஜோன்ஸ் அணியின் ப.இலவேந்திரா 81, ச.இராஜாராம் 63, அணித்தலைவர் பா.பிரதீபன் 54 ஓட்டங்களைப் பெற்றனர்.

சென்றல் அணியின் தரப்பில் கே.ரோகான் 35ஓட்டங்களைப் பெற்றார்.

சென்றல் அணியின் சார்பில் வி. இரஜீவ்குமார் 4 விக்கெட்டுக்களைக் கைப்பற்றினார். ஆட்டம் இன்று தொடர்ந்து நடை பெறும். (உ-9)

# பொன் அணிகள் போரில் சென். பற்றிக்ஸ் முன்னணி!

யாழ்ப்பாணம் சென் பற்றிக்ஸ் கல்லூரிக்கும் வட்டுக்கோட்டை யாழ்ப்பாணக் கல்லூரிக்கும் இடையில் நேற்று ஆரம்பமான 'பொன் அணிகள் போரில்' முதலில் துடுப்பெடுத்தாடிய யாழ்ப்பாணக் கல்லூரி அணி தனது சகல விக்கெட்டுக்களையும் இழந்து 90 ஓட்டங்களைப் பெற்றது.

தொடர்ந்து துடுப்பெடுத்தாடிய சென. பற்றிக்ஸ் அணி ஆட்ட நேர இறுதியில் 3 விக்கெட் இழப்புக்கு 144 ஓட்டங்களைப் பெற்றிருந்தது. சென். பற்றிக்ஸ் அணியின் ஏ.ஆர். சேர்ச்சில் 74 ஓட்டங்களுடன் ஆட்டமிழக்காமல் இருந்தார்.

சென். பற்றிக்ஸ் அணியின் தலைவர் எம்பிரசாந்தா ஜோசப்பும் உப தலைவர் ரி. ஜூட் அன்ரனைஸும் தலா 4 விக்கெட்டுக்களை கைப்பற்றினர்.

ஆட்டம் இன்றும் தொடரும்.(உ-9)

# ஸ்கந்தா எதிர் மகாஜனா வீரர்களின் மாபெரும் போர்

தெல்லிப்பழை மகாஜனக் கல்லூரிக்கும் சுன்னாகம் ஸ்கந்தவரோதயக்கல்லூரிக்கும் இடையிலான "வீரர்களின் மாபெரும் துடுப்பாட்டப் போர" (BATTLE OF THE HEROES) துடுப்பாட்டம இவ்வாண்டு முதல் நடைபெறுகின்றது.

புத்தாயிரம் ஆண்டில் ஆரம்பமாகும் இத்தொடரின் முதலாவது ஆட்டம் இன்றும் நாளையும் ஸ்கந்தவரோதயக் கல்லூரி மைதானத்தில் நடைபெறும்.

இன்றைய நிகழ்வில் பிரதம விருந்தினராக விலை மதிப்பீட்டாளர் லயன் சிவ.சிவரட்ணம் கலந்து கொள்வார்.

சிறப்பு விருந்தினர்களாக வலிகாமம் வலயத்தின் உடற்கல்வி உதவிக் கல்விப் பணிப்பாளர் வி.பாலசிங்கம், டாக்டர் நா.சிவசக்திவேல், சண்டிலிப்பாய் இந்துக் கல்லூரி அதிபர் ச.சிவநேஸ்வரன் ஆகியோர் கலந்து கொள்வர்.

இன்று பிற்பகல் 230 மணி தொடக்கமும் நாளை காலை 9 மணி தொடக்கமும் இவ்வாட்டம் நடைபெறும்.

## நிவாரண...

(முதலாம் பக்கத் தொடர்ச்சி)

அடங்கிய குழுவினர் அரிசியினைப் பார்வையிட்டு மக்கள் பாவனைக்கு உகந்ததென உறுதிப்படுத்திய பின்பே மக்களுக்கு விநியோகிக்கப்படும் - என்றும் அரச அதிபர் அங்கு தெரிவித்தார். (ஐ-5)

## சமாதான முயற்சிகளில்...

(முதலாம் பக்கத் தொடர்ச்சி)

தற்சமயம் மேற்கொள்ளப்படும் சமாதான முயற்சிகள் தொடர்பாகத் தமிழ் மக்கள் என்ன நினைக்கிறார்கள் என்று தூதரக அதிகாரி ஆயரிடம் கேட்டார். அதற்குப் பதில் அளித்து ஆயர் தெரிவித்ததாவது:-

சமாதானப் பேச்சுக்கான முயற்சிகள் குறித்து ஆரம்பத்தில் மக்கள் மகிழ்ச்சி கொண்டிருந்தனர். ஆனால் தொடர்ந்து வரும் நிகழ்வுகள் மக்கள் மனதில் சந்தேகங்களைக் கிளப்பியுள்ளன. அரசு சமாதான முயற்சியைக் கைவிட்டு யுத்தத்தை நாடுவதாக மக்கள் உணர்கின்றனர். ஜனாதிபதி ஐரோப்பிய நாடுகளில் மேற் கொண்ட விஜயத்தின் போது சமாதானத்துக்காக உழைப்பதாகக் காட்டிக் கொணடார்.

அதேவேளை புலிகளைத் தனிமைப்படுத்துவதற்கும், தடை செய்வதற்கும் அரசு முயற்சிகளை மேற்கொணடுள்ளதை உணரமுடிகின்றது.

சமாதான முயற்சிகளில் அரசு அக்கறை காட்டுவதாக இல்லை. மககளின் துன்ப துயரங்களுக்கு முடிவுகாண அரசு சமாதான முயற்சிகளில் அக்கறை காட்டி சமாதானப் பேச்சுக்களை ஆரம்பிக்க வேண்டும் என்பதே தமிழ் மக்களின் விருப்பமாகும்.

இதற்கு நெதர்லாந்து போன்ற மேற்கு நாடுகள் அரசுக்கு அழுத்தம் கொடுக்க வேண்டும் - என்று ஆயர் தெரிவித்தார்.

நெதர்லாந்து தூதரகத்தின் இரண்டாவது செயலாளர் நேற்று யாழ். அரச அதிபர் க.சண்முகநாதனையும் சந்தித்து இங்குள்ள நிலைமைகளைக் கேட்டறிந்தார்.

அரச சார்பற்ற அமைப்புக்களின் பிரதிநிதிகளையும் அவர் சந்தித்தார்.

அவர் இன்று கொழும்புக்கு திரும்பும் வழியில் பலாலியில் யாழ். மாவட்டப் படைத் தளபதி மேஜர் ஜெனரல் அன்ரன் விஜேந்திராவைச் சந்திக்க உள்ளார். (ஐ-3-5)

## வன்னியில்....

(முதலாம் பக்கத் தொடர்ச்சி)

என்ற உண்மையை மறந்து விட்டு, வெளியுறவு அமைச்சர் கதிர்காமருடன் சேர்ந்து நீங்கள், புலிகளைப் பயங்கரவாத அமைப்பாக அறிவிக்கும்படி சகல அரசுகளையும் கோருகின்றீர்கள்.

நோர்வேத் தூதரைச் சந்தித்த தன் வாயிலாக சமாதானத் தீர்வில் தமக்குள்ள உறுதியை வெளிப்படுத்தியுள்ள புலிகள், ஐக்கிய இலங்கைக்குள் தீர்வுகாணவும் இணங்கியுள்ளனர். தங்களது நல்லெண்ணத்தை வெளிப்படுத்துவதற்காக அவர்கள் ஒரு தலைபட்சமான யுத்தநிறுத்தத்தை அறிவிததோடு அதனை மூன்றாவது மாதமாக நடித்தும் உள்ளனர். இணங்கிய படி, தெற்கில் சிவிலியன்கள் மீதான தாக்குதல்களில் இருந்து அவர்கள் விலகியுள்ளனர். அத்தோடு தமது காவலில் இருந்த கைதிகள் சிலரைக் கூட அண்மையில் அவர்கள் விடுவித்துள்ளனர்.

யுத்தநிறுத்தத்தை செய்வதற்கு அரசு விரும்பாவிட்டால், யுத்தத் தீவிரத்தையாவது அரசு குறைக்கலாம். ஆனால், நல்லிணக்கம் ஏற்படுவதற்கு மாறான செயல்கள் இடம்பெறுவதையே நாம் காண்கிறோம். இரண்டுகும் அதிக தடவைகள் (மார்ச் 15 மற்றும் 22ஆம் திகதிகளில்) சிறீலங்கா விமானப்படையின் 'சுப்பசொனிக்' ஜெட் விமானங்கள் முல்லைத்தீவுக் கரையோரத்தில் உள்ள சிவிலியன் இலக்குகள் மீது குண்டுகள் வீசியுள்ளன. இதனால் ஒரே குடும்பத்தைச் சேர்ந்த நால்வர் அந்த இடத்திலேயே பலியாகியுள்ளதுடன் ஒரு குழந்தை உட்பட 11 பேர் காயமடைந்துள்ளனர்.

கடந்த வருடம் தென்மராட்சி இராணுவ நடவடிக்கைகள் மற்றும் கரையோர மீனவக் கிராமங்களின் வீழ்ச்சி ஆகியவற்றை அடுத்து இப்பகுதியைச் சேர்ந்த மக்கள் இங்கு தமது தொழிலைச் செய்யமுடியாத நிலையில் சுண்டிக்குளம் மற்றும் கரையோரப் பிரதேசங்களுக்கு இடம்பெயர்ந்துள்ளனர். அங்குள்ள பொது மக்கள் பரம்பல் குறித்து கவலை ஏதும் கொள்ளாமல் 'சுப்பசொனிக்' ஜெட் விமானங்கள் அங்கு குண்டுகளைப் பொழிகின்றன. உண்மை நிலையை முல்லைத்தீவு அரச அதிபர் மூலம் உறுதிப்படுத்திக் கொள்ள முடியும்.

எனவே எதிர்காலத்தில் மனித அழிவு நடவடிக்கையில் ஈடுபடவேண்டாம் என விமானப்படைக்கு உத்தரவிடும்படி நீதி மற்றும் சமாதானத்தின் பெயரால் உங்களை கேட்டுக் கொள்கின்றேன். அது சமாதான நடவடிக்கைகளுக்கு அத்தியாவசியமானது.

- என்று தெரிவிக்கப்பட்டுள்ளது.

## தலைகீழாக...

(முதலாம் பக்கத் தொடர்ச்சி)

பட்டுள்ள இரு வெவ்வேறு அடிப்படை உரிமை மீறல் மனுக்களை நீதியரசர்கள் கலாநிதி ஏ.ஆர்.பி.அமரசிங்க, கலாநிதி ஷிராணி பண்டாரநாயக்க, அமிர் இஸ்மாயில் ஆகியோரைக் கொண்ட உயர் நீதிமன்றம் விசாரணைக்கு ஏற்றுக்கொண்டுள்ளது. மேற்படி இருவரும் தாங்கள் சட்ட விரோதமாகக் கைது செய்யப்பட்டு, தடுத்து வைக்கப்பட்டு, மனதாபிமானமற்ற முறையில் நடத்தப்பட்டதாகத் தமது மனுக்களில் தெரிவித்துள்ளனர்.

## கிரான்...

(முதலாம் பக்கத் தொடர்ச்சி)

பிரஸ்தாப இளைஞர் உடனடியாக கைகள் கட்டப்பட்டு ஓட்டோ ஒன்றில் ஏற்றிச் செல்லப்பட்டவேளை உடன் சென்ற சிப்பாய்களில் ஒருவரின் துப்பாக்கி மர்மமான முறையில் வெடித்ததில் அருகில் இருந்த சிப்பாய் ஒருவர் தலையில் வேட்டுப் பாய்ந்து உயிரிழந்ததாகவும் -

இதனையடுத்து அடுத்த சிப்பாய் மேற்கொண்ட துப்பாக்கிப் பிரயோகத்தில் ஓட்டோவில் அழைத்துச் செல்லப்பட்ட இளைஞர் பலியானதாகவும் -

படை வட்டாரங்கள் தெரிவித்தன.

(ஐ-3-6)

## குடும்பஸ்தர்....

(முதலாம் பக்கத் தொடர்ச்சி)

இப்பிரதேசத்தில் விடுதலைப் புலிகளைக் கண்காணிப்பதற்காகப் பதுங்கியிருந்த இராணுவத்தினர் துப்பாக்கிப்பிரயோகம் மேற்கொண்டதாக மடக்களப்புத் தகவல்கள் தெரிவித்தன.

இதேவேளை -

அம்பாறை - மட்டக்களப்பு மாவட்ட எல்லையில் 35 ஆம் கொலனியில் நேற்றுமுன்தினம் இரவு இடம்பெற்ற துப்பாக்கிச் சூட்டுச் சம்பவமொன்றில் வெள்ளைக்குட்டி தவமணி என்ற 38 வயதுப் பெண் ஒருவர் காயமடைந்துள்ளார். (ஐ)


கடதாசி, மட்டை, பொலித்தீன், கண்ணாடி, மரப்பலகை, தகரம், பிளாஸ்ரிக் முதலான எப்பொருளிலும் அச்சடிக்கும் குடிசைக் கைத்தொழிலான

**ஸ்கீறீன் பிரின்டிங்**

பயிற்சி வகுப்புகள்

3ஆவது பிரிவினருக்காக: 25.03.2001இல்

காலை 9 மணிக்கும் மாலை 4 மணிக்கும் ஆரம்பமாகின்றன.

விவரங்களுக்கு:

**S.S.யசோதரன் ஆட்ஸ்**

185, கஸ்தூரியார் வீதி, யாழ்ப்பாணம்.

(வின்சர் தியேட்டர் முன், மேல்மாடி)

பயிற்சிக் கட்டணம் 2000 ரூபா

(85807)



## பண்ணிசைப் போட்டி

நீராவியடி கிராம அபிவிருத்திச் சங்கத்தினால் புதுவருட விழாவையொட்டி மாணவர்களுக்கிடையேயான பண்ணிசைப் போட்டி ஒன்று ஒழுங்கு செய்யப்பட்டுள்ளது. இதில் வெற்றி பெறுபவர்களுக்கு ஒவ்வொரு பிரிவிலும் முதலாம் பரிசாக தங்கப்பதக்கமும் 2ஆம் பரிசாக வெள்ளிப்பதக்கமும் 3ஆம் பரிசாக வெண்கலப் பதக்கமும் 2 ஆறுதல் பரிசுகளும் வழங்கப்படும்.

*போட்டிக்கான விண்ணப்ப முடிவு திகதி 31.03.2001 ஆகும்.*

போட்டிக்கான விண்ணப்பப் படிவங்களை பின்வரும் முகவர்களிடம் பெற்றுக் கொள்ளலாம்.

விண்ணப்பப் படிவம் ஒன்றின் விலை: இருபது ரூபா

நிர்வாகம்

கிராம அபிவிருத்திச் சங்கம்,

நீராவியடி.

*தொலைபேசி இல:2293*

01) இ.ஆனந்தகுமார் (ஐயா அண்ணை) பண்டத்தரிப்பு
02) எஸ்.ஆர்.பி.ஸ்ரோஸ் - சங்கானை
03) நாயகபாலன் - மானிப்பாய்
04) கனகா ரேடஸ் - திருநெல்வேலி
05) தருமலிங்கம் பாஸ்கரன் - கொக்குவில்
06) ச.சுப்பிரமணியம் பேப்பர் கடை - இணுவில்
07) மொடேர்ன் ஸ்ரோஸ் - நெல்லியடி
08) மூர்த்தி - பருத்தித்துறை
09) ரஜீவி பீடா ஸ்ரோஸ் - உடுப்பிட்டி
10) சாந்தி - வேலணை
11) பூபாலசிங்கம் புத்தகசாலை - யாழ். (C.15875)



**மலிவு விற்பனையில்**

புதிய, பழைய

படப்போஸ்ரர்கள்

விற்பனைக்குண்டு.

ஒரு சில தினங்கள் மட்டும்

**அஸ்வினி வீடியோ சென்ரர்**

198/9, பொன்னப்பா லேன்,

வண்ணார்பண்ணை,

யாழ்ப்பாணம்.

(C/15876)



## விக்னா கல்வி நிறுவனம்

52, ஸ்ரான்லி வீதி, யாழ்ப்பாணம்.

**A/L 2003 கலை, வர்த்தகம்**

ஆரம்பம் :- 25.03.2001 ஞாயிறு காலை 8.00a.m.

| | | |
|---|---|---|
| ACC. | ECO. | COM. |
| திரு.பாலவாசன் | திரு.விக்கி | திரு.நந்தீஸ் |
| TAMIL | LOG. | HIC. |
| திரு.லிங்கம் | திரு.சயந்தன். | திரு.பத்மராஜா |
| HIST. | GEO. | CHRI. |
| திரு.அன்ரன் | திரு.ஐங்கரன் | திரு.வசந்தன் |
| DRAMA | I/Q | |
| திரு.மதி | திரு.அன்ரன் | |

(85574)



யா/மானிப்பாய் சோதி வேம்படி வித்தியாசாலை

## இல்ல மெய்வன்மைப் போட்டி - 2001

காலம் : இன்று (24.03.2001) சனிக்கிழமை பிற்பகல் 1.30 மணி

இடம் : யா/மானிப்பாய் மகளிர் கல்லூரி மைதானம்.

*தலைவர்* : திரு.அ.நடராசா *(அதிபர்)*

*பிரதம விருந்தினர்* : திருமதி றெஜினா இருதயநாதன்

*(பிரதிக்கல்விப் பணிப்பாளர், வலிகாமம் வலயம் )*

*சிறப்பு விருந்தினர்* : திரு.க.தனபாலசிங்கம்

*(உதவிக் கல்விப் பணிப்பாளர், சண்டிலிப்பாய்)*

*கௌரவ விருந்தினர்* : திரு.வெ.அ.ஜோன்சன் (J.P.U.M.)

*(பிரதேச சபைத் தலைவர் வலி.தென்மேற்கு)*

*விசேட விருந்தினர்* : திரு.கு.சண்முகநாதன்

*(அதிபர், மானிப்பாய் இந்துக் கல்லூரி)*

திருமதி வி.பசுபதிப்பிள்ளை

*(அதிபர், யா/மானிப்பாய் மகளிர் கல்லூரி)*

அனைவரையும் அன்புடன் அழைக்கின்றோம்.

பாடசாலைச் சமூகம்

யா/மானிப்பாய் சோதி வேம்படி வித்தியாசாலை.

(85810)



இறுதித்தடவையாக

கைலாசபதி கலையரங்கில்

**உயிர்விசை**

(நாடக ஆற்றுகை)

**25~03~2001**

ஞாயிற்றுக்கிழமை

10.30 (பு.நேரம்) 3.30

முகாமைத்துவ கற்கைகள் வணிக பீட மாணவர் ஒன்றியம்


## மரண அறிவித்தல்

### சோமசுந்தரக்குருக்கள் குப்புலட்சுமி அம்மா

புளியங்கூடலைச் சேர்ந்த சோமசுந்தரக்குருக்கள் குப்புலட்சுமி அம்மா வெள்ளியிரவு காலமாகிவிட்டார்.

இறுதிக்கிரியைகள் பற்றிய விவரம் பின்னர் அறிவிக்கப்படும்.

இவ்வறிவித்தலை உற்றார், உறவினர், நண்பர்கள் ஏற்றுக்கொள்ளுமாறு வேண்டுகிறேன்.

தகவல்:

சோ.வரதராஜக்குருக்கள்

(மகன்)

புளியங்கூடல்

தற்போதைய முகவரி:-

*2ஆம் ஒழுங்கை, பிறவுண் வீதி,*

*யாழ்ப்பாணம்.*

(C/15879)

இப்பத்திரிகை நியூ உதயன் பப்பிளிகேசன் (பிறைவேற்) நிறுவனத்தினரால் யாழ்ப்பாணம், கஸ்தூரியார் வீதி, 361ஆம் இலக்கத்திலுள்ள அவர்களது பணிமனையில் 24.03.2001இல் அச்சிட்டு வெளியிடப்பெற்றது.